# போராட்டம்

2014 மே | இதழ் 12 | இப்பத்திரிகை மக்கள் போராட்ட இயக்கத்தின் வெளியீடு | 30.00 ரூபா


# தொழிலாளர்களுக்கு எதிரான நவ தாராளமயத்தின் தாக்குதல்

## புதிய அமைப்பு மாதிரிகளை கட்டியெழுப்புவதாக தொழிலாளர் அமைப்பு கூறுகிறது

### சமவுடமை வாழ்க்கை— சமவுடமை சமுதாயம்



ஒருகொடவத்தை நவகம்புர மைதானத்தில் நடைபெறும் தொழிலாளர் தினத்திற்காக தோழமையினதும், கூட்டுறவினதும் உழைப்பு ஒன்றுசேரும் விதம் "போராட்டத்தின்" கமெராவிற்குள் இவ்வாற சிக்கியது.

**இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 2013ம் வருடத்திற்கான அறிக்கையில் எதிர்கால பொருளாதார எதிர்ப்பார்ப்புக்கள் சம்பந்தமான பகுதியில் குறிக்கப்பட்டுள்ள இலக்கங்களுக்கு ஏற்ப தொழிலாளர் வர்க்கத்தின் மீது பாரிய தாக்கங்கள் ஏற்படுவது உறுதியென தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது. கடந்த வருடத்தில் வெளிநாட்டுக்குச் சென்ற இலங்கை உழைப்பாளிகளினால் சம்பாதிக்கப்பட்ட பணம் 5985 டொலரிலிருந்து 6407 டொலர் வரை 7 வீதத்தால் அதிகரித்துள்ளது.**

ஆயத்த ஆடைகள் உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருமானம் 4508.3 மில்லியன்டொலர்வரை அதிகரித்துள்ளது. அரசாங்கம்தனது எதிர்கால பொருளாதார திட்டமாக முன்வைக்கப்பட்டிருப்பது அதிகமதிகமாக தொழிலாளர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதும், ஆயத்த ஆடைத் தொழில், சுற்றுலாத் துறை மற்றும் தேயிலை உற்பத்தித் துறை மீதும்தான். இப்போதே இத்துறைகளுக்குள் சேவையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த நிபந்தனைகள் அல்லது நிபந்தனைகள் இல்லாமலோ பாரிய சுரண்டலுக்கு உட்பட்டுள்ளனர். இந்தச் சுரண்டலை எதிர்காலத்தில் அதிகரப்பதும், சுரண்டலுக்குப் பலியாகும் அளவை அதிகரிப்பதும் அரசாங்கத்தின் நோக்கமாக இருப்பதாக தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது.

வெளிநாட்டில் வேலை செய்யும் இலங்கை உழைப்பாளிகள் தொழில் உரிமைகளுக்காகவாவது ஒருங்கிணைந்தில்லாததோடு, ஆயத்தை ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெரும்பாலானோருக்குச் சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் தொழிற்சங்கங்களை அமைப்பதற்குக் கூட உரிமை இல்லை. சுற்றுலாத் துறைக்கு வசதிகளை வழங்குவோராக செயல்படும் உழைப்பாளிகளின் பிரச்சிணைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து நாட்டில் குரலெழுப்பு யாரும் இல்லாததோடு, தேயிலைத் தொழிற் துறையில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்த மாதச் சம்பளம் கூட கிடைப்பதில்லை. கஷ்டமான சேவை நிபந்தனைகளின் கீழ் சுரண்டப்படுகிறார்கள். தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சங்கங்கள் முற்றாக முதலாளித்துவ அரசியல் கட்சிகளுக்கு பலியாகியுள்ளன. அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்களுக்கேற்ப இந்த துறைகளில் தொழிலாளர்களின் விகிதாசாரம் அதிகரிக்கப்படவிருப்பதோடு, ஏனைய துறைகளை நோக்கி மேன் பவர் மற்று ஒப்பந்த முறை செயற்படுவதால் அமைப்பு ரீதியில் செயற்படுவது தொடர்பில் பாரதூரமான சிக்கல்கள் காணப்படுகின்றன.

இந்த நிலைமையில் தொழிலாளர்களை அமைப்பு ரீதியில் ஒருங்கிணைப்பதற்காகவும், ஒருங்கிணைக்கப்பட்ட தொழிலாளர்களை தொழிற் சங்கத்திற்கும் அப்பால் செயற்பட வைப்பதற்காகவும் புதிய அமைப்பு முறைகள் சம்பந்தமாகவு கவனம் செலுத்தியுள்ளதாக தொதழிலாளர் போராட்ட மத்திய நிலையம் கூறுகிறது. இம்முறை மே தினத்தை மையமாகக் கொண்டு மே தினத்திற்கு முன்னரும், மே தினத்திற்கு பின்னரும் செயற்படும் வேலைத் திட்டத்தில் அதற்கான ஆர்ப்பாட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக மத்திய நிலையம் மேலும் கூறுகிறது.


**பாதை தெரியாமல் கொடிகளுக்குள் மாட்டிக் கொள்ளல்** 3





7 **மேதின நினைவுகள்... திருமதி சாந்தா சிவநாதனுடன் சில நிமிடங்கள்...**





10 **முதலாளித்துவ 'ஜனநாயகமும்', தேர்தல் முறையும் காலாவதியாகிவிட்டது**




# கடத்தல், காணாமலாக்கல் மற்றும் அடக்குமுறைக்கு முடிவு கட்டுவதற்காக ஏகாதிபத்தியத்திற்கும் தேசிய அழுத்தத்திற்கும் இனவாதத்திற்கும் எதிராக போராடுவோம்

**மக்கள் போராட்ட இயக்கம்**

தினக்குரல் பத்திரிகையின் யாழ். வடமாராட்சிக்கான பிரதேச நிருபர் சிவஞானம் செல்வதீபன் கடந்த 14ம் திகதி இரவு அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு கடுமையான காயங்களுடன் பருத்தித்துறை மாந்தை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

செல்வதீபன் இற்றைக்கு சில வருடங்களுக்கு முன்னர் செல்வதீபனின் சகோதரர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதற்கு எதிராக குரலெழுப்பியவராகும். இந்த சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்னர், விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் ஒருங்கிணைப்பதற்கு துணையாக இருந்தார் என்ற குற்றஞ்சாட்டி செல்வநாயகம் கதீபன் அல்லது கோபி உட்பட மேலும் இருவர் கொலை செய்யப்பட்டதாக பாதுகாப்புப் பிரிவு அறிவித்திருந்தது.

கோபி உட்பட விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின் பெயரில் மேலும் 60 க்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டதோடு, அவர்களில் 41 பேர் பொலிஸ் பயங்கரவாத தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவம் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புகளில் கைதுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதோடு, விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்குவதாக செய்திகளும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஜெனீவா மனித உரிமைகள் மாநாட்டின் பின்னர் சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் அரசாங்கம், தான் எதிர்பார்த்திராத முடிவுகளை சந்திக்க வேண்டிய நிலை கடந்த மாகாண சபை தேர்தலின்போது ஏற்பட்டது.




தற்போதை வடிவமாகிய நவதாராளமய முதலாளித்துவ தந்திரோபாயங்களை நாட்டில் செயற்படுத்திக் கொண்டிருக்கும் அரசாங்கம், பெரும்பான்மையான ஒடுக்கப்பட்ட மக்களின் வாழும் உரிமையை நாளுக்கு நாள் அபகரித்துக் கொண்டிருக்கிறது. அரசியல் மற்றும் பொருளாதார ரீதியிலான தமது நெருக்கடியை மூடி மறைப்பதற்கு அடக்குமுறையைத் தவிர வேறு மாற்றீடு அவர்களிம் கிடையாது. சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து மக்களினதும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கோ, உரிமைகளை பெற்றுக் கொடுப்பதற்கோ வக்கில்லாத முதலாளித்துவ அரசாங்கம் அதன் காரணமாக நாளுக்கு நாள் தம்மை விட்டு நழுவிச் செல்லும் மக்கள் செல்வாக்கை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கத்தில் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒருங்கிணைவது தொடர்பான செய்திகளை நிர்மாணித்து, தமது அரசியல் அதிகாரத் தேவைக்காக இனவாதத்தை வெளிப்படையாகவே அரங்கேற்றுகிறது.

உண்மையான பிரச்சினைகளை பின்தள்ளப்பட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாறு பூராவும் இந்த பொறிக்குள் சிக்கவைக்கப்பட்டனர். இன்றைய நிலையிலும் அதற்கான அடையாளங்கள் தெரியத் தொடங்கியுள்ளன. நாளுக்கு நாள் தமது வாழும் உரிமையை அபகரித்துக் கொண்டிருக்கும் உண்மையான எதிரியை அடையாளம் காண்பதற்குப் பதிலாக இனவாத பிரிவினையை நிர்மாணித்து, போலி எதிரிகளையும் நிர்மாணித்து உண்மையை மறைக்க நாம் இடமளிக்கலாமா? நாட்டில் பாரதூரமான மனித உரிமைகள் பிரச்சினை இருப்பது உண்மைதான். என்றாலும், மத்திய கிழக்கு உட்பட உலகின் அநேக நாடுகளில் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் ஏகாதிபத்திய நாடுகளினால் வழிநடத்தப்படும் மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற நிறுவனங்கள் மனித உரிமைகள் பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்ப்பது வேடிக்கையாகும். உலகம் பூராவும் மனித உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக போராடும் எங்களைப் போன்ற ஒடுக்கப்பட்ட மக்களின் மற்றும் அவர்களின் அமைப்புகளால் மாத்திரமே அதற்கு ஒத்துழைப்பு வழங்க முடியுமே அல்லாது ஏகாதிபத்திய அமைப்புகளால் அல்ல.

இந்த முதலாளித்துவ ஆட்சியினால் தொடர்ந்து தொடுக்கப்படும் அடக்குமுறை மற்றும் ஒடுக்குமுறையின் எதிரில் தமது விடுதலையைத் தேடி இனவாதத்தின் பின்னால் அல்லது ஏகாதிபத்திய அமைப்புகளின் பின்னால் ஓடாது, கடத்தல், காணாமலாக்கல் மற்றும் அனைத்துவித அடக்கு முறைகளிலிருந்தும் நிரந்தரமாக விடுதலையடைய வேண்டுமாயின் சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைத்து ஒடுக்கப்பட்டவர்களின் அடக்குமுறைக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும், இனவாதத்திற்கும் எதிராக பரந்த அரசியல் போராட்டத்தோடு இணைய வேண்டும். அவ்வாறான பரந்த போராட்டத்தோடு கைகோர்த்துக் கொள்ளுமாறு இவற்றுக்கு எதிராக போராடும் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

# தனது அரசியல் நெருக்கடிகளை மூடிமறைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் இனவாத நடவடிக்கைகளுக்கு எதிராக அணிதிரள்வோம்!

**முன்னிலை சோஷலிஸக் கட்சி**

நெடுங்கேணி பிரதேசத்தில் புலிகள் இயக்கத்தின் இலங்கை தலைவர் என கருதப்படும் கோபி மற்றும் அவருடன் சேர்த்து மேலும் இருவரை சுட்டுக் கொன்றுள்ளதாக அரசு திடீரென அறிவித்துள்ளது. இதற்கு முன்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையில் 50க்கும் மேற்பட்டோர் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மாஅதிபர் அறிவித்திருந்தார்.

அதேபோன்று, ஜெனிவா கூட்டத் தொடரின் போது 16 தமிழ் அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. முதலாளித்துவ சட்டமுறைமைக்கும் மாறாக தொடர்ச்சியாக வடக்கில் கைதுகள், தடுத்துவைப்புகள் இடம்பெற்று வருகின்றன. இந்த சட்டவிரோத கொலைகளின் மூலம் அடக்குமுறை விரிவடைந்து வருவது தெரிகிறது.

இந்த சம்பவத்தை அவதானிக்கும் எவரும் புலிகள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளதாகவே கருதுவர். அதேவேளை அரசாங்கம் புலிகள் இயக்கத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் உடனுக்குடன் தோற்கடிப்பதாகவும் தெரியும். ஆனால் உண்மை வேறுவிதமானதாகும். அதேபோல் அரசியலும் வித்தியாசமானதாகும். அரசால் விளங்கிகொள்ள முடியாத தேர்தல் முடிவுகளும் ஜெனிவா தீர்மானத்தை அடுத்து இலங்கை தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள மனித உரிமை ஆணைக்குழு தொடர்பாகவும் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதுமே அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. விலைவாசி ஏற்றம் மற்றும் அதற்கு சமமான ஏனைய நெருக்கடிகளுக்கும் உள்ளாகியுள்ள மக்கள் அரசாங்கத்தில் இருந்து விலகிச் செல்லும் போக்கை தடுப்பதற்காகவே அரசாங்கம் இனவாதத்தை பரப்ப தொடங்கியுள்ளது. இந்த நிலைமைகளின் முன் அரசாங்கத்திற்கு மீண்டும் புலிகள் தேவைபடுகிறார்கள்.

மறுபுறத்தில் வடக்கு மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இருந்து விடுபடமுடியாத நிலையில் இனவாத அடிப்படையில் அணிதிரள்வதற்கான நிர்பந்தம் ஏற்படுவதை எவராலும் மறுக்கமுடியாது. அதேவேளை வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு இனவாத அடிப்பயில் தீர்வு காணமுடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை கிடையாது.

எந்தவொரு நபரும் தான் பின்பற்றும் கொள்கை தொடர்பில் செயல்படுவதை எவராலும் தடுக்க முடியாது. அது இனவாதம், தேசியவாதம், பிரிவினைவாதமாக இருக்கலாம். அதேவேளை இவ்வாறான பிழையான கொள்கைகளை தோற்கடிப்பதற்கு அடக்குமுறைகளை கையாள்வதானது நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிடும். இப்படியாக பிழையான கொள்கைகளை தோற்கடிக்க அடக்கு முறைகளை கையாண்டதன் பலனாக ஏற்பட்ட பேரழிவுகளை நாம் அனுபவரீதியாக கண்டுள்ளோம். தற்போது காணப்படும் நிலைமையானது அரச இயந்திரம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதாகும். இந்நிலையில் அரசாங்கம் தனது நெருக்கடிகளை மூடிமறைக்க சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை இனவாத அடிப்படையில் பிரிக்கும் வெட்கம் கெட்ட அரசியலை பின்பற்றுகிறது.

எனவே அனைத்து இனவாத அரசியல் சக்திகளுக்கு எதிராகவும், ஜனநாயக மறுதலிப்பு நடவடிக்கைகளை தோற்கடிக்கவும், வடக்கு, தெற்கு இன, மத, மொழி பேதங்களை மறந்து ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்றிணையும்படி நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

# மரைக்கார்தீவுக் கிராமம் வில்பத்து காட்டுக்குள் இருக்கின்றதாம்!



1990 களில் புலிகளின் இனவிரோதக் கொள்கையால், மரைக்கார்தீவு மக்கள் சொந்த வாழ்விடத்தை விட்டு துரத்தப்பட்டனர். மீளக் குடியேறிய முஸ்லிம் மக்களை 2014 இல் மீண்டும் பௌத்த அடிப்படைவாதிகள் துரத்துகின்றனர். அரசாங்கத்தின் துணையுடன் பௌத்த அடிப்படைவாதிகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் முஸ்லீம் விரோத பிரச்சாரம் மற்றும் ஒடுக்குமுறையாகும்.

முசலி பிரதேச சபைக்கு உட்பட்ட மரைக்கார்தீவு கிராமத்தில் வசித்த முஸ்லிம் மக்கள் வாழ்ந்த பிரதேசத்தையே, மதக் காட்டுமிராண்டிகள் வில்பத்துக் காடு என்கின்றனர்

1990 இல் புலிகள் துரத்தும் போது வாழ்ந்த மக்கள் விட்டுச்சென்ற மையவாடியும், பள்ளிவாசலும், கிணறும் இன்னமும் அங்கு தான் காணப்படுகின்றது. தங்கள் வாழ்விடத்தில் மீளக் குடியேறுபவர்களைப் பார்த்து வில்பத்து காட்டுக்குள் குடியேறுகிறார்கள் என்று திட்டமிட்டு கூறுவதும், அதை பிரச்சாரம் செய்வதும் தொடர்ந்து இன மற்றும் மத வன்முறையைத் தூண்டும் பாரிய குற்றமாகும். புலி செய்ததையே இன்று மீண்டும் செய்வது, புலிக்கு நிகரான மனித விரோத குற்றமாகும்.

இலங்கையில் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் வாழ்விடங்கள் பறிப்பது தொடருகின்றது. அபிவிருத்தியின் பெயரில், புனிதபூமியின் பெயரில், இராணுவத்தின் பெயரில், இனத்தின் பெயரில், மதத்தின் பெயரில், உழைக்கும் மக்கள் அல்லாதவர்களினால் தொடர்ந்து கொள்ளைக்கு உள்ளாகின்றது.

# பாதை தெரியாமல் கொடிகளுக்குள் மாட்டிக் கொள்ளல்



வாகன விபத்துக்கள் மற்றும் குடும்பத்தோடு மரணித்தல் போன்று கொடுமைகள் குறித்து பேசிக் கொண்டிருக்கும்போதே புதுவருடம் குறித்து ஆர்வம் முடிவுக்கு வந்தது. செந்நிற மே தின மலர்கள் பூக்கத் துவங்கியதோடு சிகப்பு முருங்கைப் பூக்கள் வாடத் துவங்கியிருக்கின்றன. மே தினம் அல்லது சர்வதேச தொழிலாளர் தினத்தைப் பற்றிய பேச்சுக்கள் மெதுவாக ஆரம்பமாகிக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளின் மீள் வரவு குறித்தும் வில்பத்து குடியமர்வுகளை காரணமாக வைத்து இனவாத மோதல்கள் குறித்து செய்திகளினால் ஊடகங்கள் நிறைந்திருக்கின்றன. ஆகவே, இனவாதம், மதவாதம், குறுகிய பிரதேசவாதம் குறித்து மனவேதனை தரக் கூடிய பேச்சுக்களோடு மே தினத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மீள் வரவு

கடந்த மார்ச் மாதம் நிறைவடையும் வரை அரசாங்கத்தின் பிரச்சார ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக இருந்தது ஜெனீவா மனித உரிமைகள் மாநாடு மற்றும் இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகள் சம்பந்தமானதுதான். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகள்கூட விதிக்கக் கூடிய ஆபத்து இருப்பதாகவும், ஜனாதிபதியை மின்சார



நாற்காலியில் அமர வைக்கும் திட்டம் இருப்பதாகவும் கூறப்பட்டது.

அந்த ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை பாதுகாப்பதற்காக முன்வைக்கப்பட்ட தீர்வாக இருந்தது மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வெல்ல வைப்பதுதான். என்றாலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு என்ற துருப்புச் சீட்டு அவ்வளவு எடுபடவில்லை. மார்ச் மாத இறுதியில் நடந்த மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையில் மனித உரிமைகள் சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு இரு நாட்களுக்கு முன் நடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் வாக்கு வங்கி சரிந்து காணப்பட்டது. எனவே, பழைய துருப்புச் சீட்டுகளுக்குப் பதிலாக புதிய துருப்புச் சீட்டுக்களை பயன்படுத்தி போட்டியின் புதிய சுற்று ஆரம்பமாகியது. “புலி வருகிறது: என கத்துவதுதான் அந்த புதிய துருப்புச் சீட்டு.

தமிழ் இனவாதம் அல்லது தனி ராச்சியம் குறித்து கருத்துக்கள் ஒரு சில துஷ்டர்களின், சதிகாரர்களின் மனதில் தோன்றிய கருத்துக்கள் அல்ல. அப்படியான கருத்துக்கள் உருவாவதற்கும், நிலைப்பதற்கும் தேவையான பெதீக காரணிகள் இருக்கின்றன. அதற்கான வரலாற்றுக் காரணிகளும் உண்டு. தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள தேசிய ஒடுக்குமுறைக்கான தீர்வு குறித்து ஒடுக்கப்பட்ட மக்களோடு விரிவாகப் பேச வேண்டும். அதன்போது எழும் கேள்விகளுக்கு தேசியவாத மற்றும் குறுகிய பிரதேசவாத கருத்துக்களோடு மோத வேண்டும். அவ்வாறான செயற்பாட்டின் மூலம்தான் சிங்கள தமிழ் முஸ்லிம், பறங்கியர், மலே ஆகிய அனைத்து மக்கள் குழுமங்களோடு கீழிருந்து மீள் கூட்டிணைவையும், ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் கட்டியெழுப்ப முடியும். என்றாலும், இலங்கையின் ஆளும் வர்க்கத்திற்கு அப்படியான ஆற்றலோ தேவையோ கிடையாது. சுவால்களை நேருக்கு நேர் சந்திப்பதற்குப் பதிலாக சவால்களை தவிர்த்துச் செல்லவே அவர்களால் முடியும். அதற்கேற்பத்தான் தடைசெய்தல், கொலை செய்தல், அடக்குமுறை செய்தல் ஆகியன செயற்படுகின்றன. ஜே. ஆரின் அரசாங்கத்தினால் அமிர்தலிங்கம்கள் நாடாளுமன்றத்திலிருந்து விரட்டப்பட்டமைதான் 30 வருட யுத்தித்தின் ஆரம்பம் என்பதை மறந்துவிடக் கூடாது.

இப்போது அந்த நாடகம் மீண்டும் மேடையேற்றப்பட்டுள்ளது. ஏப்ரல் முதலாம் திகது வெளிநாட்டு தமிழ் இயக்கங்கள் 16 தடை செய்யப்பட்டமை. விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளமைப்பதாகக் கூறி கோபி, அப்பன், மற்றும் தேவியன் ஏப்ரல் 10ம் திகதி கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்களை பார்க்கும்போது அரசாங்கம் சவாலுக்கு மேலால் தப்பி ஓடுவதை தேர்ந்தெடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஏகாதிபத்தியம் குறித்த துருப்புச் சீட்டு தவறிய பின்னர் விடுதலைப் புலிகளின் மறுபிறப்பைப் பற்றிய துருப்புச் சீட்டை அரசாங்கம் பயன்படுத்துகிறது. ஜே, ஆரின் அரசாங்கம் அரசியல் சாஸன திருத்தத்தின் ஊடாக தமிழ் பிரபுக்கள் வர்க்கத்தின் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திலிருந்து விரட்டியது. ராஜபக்ஷ அரசாங்கம் இயக்கங்களை தடை செய்தல் மற்றும் நபர்களை அடியோடு ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றது. விடுதலைப் புலிகளின் மீள்வரவு எப்படியிருந்த போதிலும் இனவாதத்தினதும், ஒற்றுமையின்மையினதும் கொடுமையினதும் மறுபிறப்பு நடந்து கொண்டிருப்பது என்னவோ உண்மை. இந்த அனைத்து கொடுமைகளையும் தடுப்பதற்கு இருக்கும் ஒரே தீர்வு ஒடுக்கப்பட்டவர்களின் ஒற்றுமைதான். கீழ் வர்க்கத்தின் ஐக்கியம்தான். சமூகத்தில் நிலவும் உண்மையான ஐக்கியத்திற்கான வழிகள் மறைக்கப்பட்டு ஆளும் வர்க்கத்தினால் போலி ஐக்கியத்தை உருவாக்கும் வரலாறு மீளமைக்கப்படுவதை தடுக்க வேண்டும். தொழிலாளமர் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ஆட்சியாளர்களினது தந்திரோபாயங்களின் பங்காளிகளாவதற்குப் பதிலாக தனது சக்தியை வளர்த்துக் கொள்வதனாலேயே அதனைச் செய்ய முடியும்.சிங்கள தனித்துவம், தமிழ் தனித்துவம், முஸ்லிம் தனித்துவம் ஆகியன திக்குத் தெரியாமல் கொடிகளில் சிக்கிக் கொள்ளும் அரசியலாக இருப்பதோடு, தொழிலாளர், விவசாயிகள், மீனவர், மாணவர், இளைஞர், பெண்கள் ஆகிய ஒடுக்கப்பட்ட சக்திகளின் அரசியலாக இருக்க வேண்டியது சிக்கிய கொடிகளை அவிழ்த்துவிடும் அரசியலாகம்.

வில்பத்துவின் குழப்பம்

வில்பத்து பாதுகாப்பு பகுதியில் நடைபெறம் குடியிருப்புகளை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலத்தில் ஏற்பட்ட குழப்பம் இரு கால்களும் கொடிகளில் சிக்கிய அரசியல் வெற்றிகரமாக நடைபோடுகிறது என்பதற்கு சான்றாகும். வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கூற்றுப்படி வில்பத்து காப்புப் பிரதேசத்தில் சிலர் குடியேறி இருக்கின்றனர். அந்த குடியேற்றத்தின் பின்னணியில் மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதூர்தீன் இருப்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. பொதுபல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் இதனைப் பயன்படுத்தி முஸ்லிம் எதிர்ப்பொன்றை உருவாக்க முயற்சிக்கிறது. முஸ்லிம் மக்கள் இலங்கையில் காணிகளை கைப்பற்றிக் கொள்வதாக அவர்கள் கூறுகின்றனர். இலங்கை முஸ்லிம்களின் பெரும்பாலானவர்தகள் சிறு வர்த்தகர்களாக உள்ளனர். நிலத்தை குறைவாகவே பயன்படுத்துகின்றனர். முஸ்லிம் மக்களில் குறிப்பிட்டளவினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் பட்சத்தில் இந்த இனவாத குழுக்களால் ஆக்கிரமிப்பைப் பற்றி கதைக்க முடியாது. முஸ்லிம் மக்கள் உள்ளிட்ட முழு நாட்டு மக்களும் காணிப் பிரச்சிணைக்கு முகம் கொடுப்பதை உதாரணங்களோடு எடுத்துக் காட்டத் தேவையில்லை. விவசாய நடவடிக்கைகளுக்காக மாத்திரம் அல்லாது குடியிருப்பிற்கும் காணி தேவைப்படுகிறது. அனுமதியற்ற குடியிருப்பாளர்களாக முத்திரை குத்தி விரட்டப்படும் மக்கள் மாத்திரமல்ல, விகாரைகள், புத்த மடங்களுக்குச் சொந்தமான காணிகளில் குடியேறுவதனால் ஆயுள் முழுக்க துன்பப்படும் மக்கள் இதற்கு சிறந்த உதாரணமாகும். விகாரைகள் மற்றும் தேவாலயங்களுக்கு உரித்தான காணிகளில் குடியிருக்கும் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் சம்பந்தமாக இம்முறை வெளிவந்த “ஜனரல” பத்திரிகையில் ஆக்கமொன்று வெளிவந்துள்ளது. வில்பத்துவில் குடியேறியிருக்கும் முஸ்லிம்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சிணையும் அதைப் போன்றதுதான். இந்தப் பிரச்சிணையில் அமைச்சர் ரிசாட் பதுயுதீன் தலையிட்டு செய்யும் குழப்பமும், பொதுபல சேனா போன்று குழுக்கள் தலையிட்டு செய்யும் அட்டூழியங்களும் தனியாக அலசப்பட வேண்டிய காரணியாகும். இந்த விடயத்தில் அமைச்சர் ரிசாட் பதுயுதீனும், பொது பல சேனாவும் ஒருவரையொருவர் போஷிக்கும் விதத்திலேயே நடந்துக் கொள்கின்றனர்.

வில்பத்து வன காப்புப் பிரதேசம் உள்ளிட்ட அனைத்து சுற்றாடல் வளங்களையும் பாதுகாக்க வேண்டும். சோமாவதிய காப்புப் பிரதேசத்தை வாழை உற்பத்திக்காக டோல் என்ற பன்னாட்டு நிறுவனத்திற்கு தாரை வார்த்தது குறித்தோ, சிங்கராஜ வனத்தை மூன்றாக பிரிக்கும் விதத்தில் பாதைகள் அமைக்கப்படுவது குறித்தோ, தெதியகல காப்புப் பிரதேசத்தை சுற்றுலா நடவடிக்கைகளுக்காக அழிக்கப்படுவது குறித்தோ, மேலும் அவ்வாறான நடவடிக்கைகள் குறித்தோ வாய் திறக்காத இனவாதிகள் வில்பத்து முஸ்லிம் குடியேற்றங்களை பற்றி மட்டுமே பேசுகிறார்கள். அவர்கள் மேற்படி விடயங்கள் குறித்தும்

15 ஆம் பக்கம் பார்க்க...

# அனுமான் சுவாமியின் அருள்வாக்கு கேட்டீர்கள்!!!

அது ஒரு வைத்தியக்கலாநிதியின் வீடு. அப்போது எனக்கு பத்து வயதிருக்கும் .அம்மாவின் கையைப்பிடித்துக் கொண்டு உள்ளே நுழைகிறேன் ஊதுபத்திகள் வாசத்தைப் பரப்பியபடி புகைவிடுகின்றன. சந்தனமும், பன்னீரும் சேர்ந்து நறுமணம் வீசுகின்றன.காவியுடை அணிந்த ஒருவரின் படத்திற்கு முன்னால் விழுந்து கும்பிடுகிறார்கள். அவரின் படத்திலிருந்து குங்குமம் கொட்டுகிறதாம். அவர் கடவுளின் அவதாரம் என்று அம்மா சொன்னா அவரின் தலை பொப்பாடகா ஏ.இ.மனோகரனின் தலைபோலசுருள், சுருளாக ஸ்பிரிங் தலையாக இருந்தது.

குங்குமம் கொட்டுவதற்கு பதிலாக இனிப்பு கொட்டினால் எப்படி இருக்கும் என்று யோசித்தேன். அதுவும் அய்ந்து சதத்திற்கு ஒன்று என்று விற்ற தோடம்பழ இனிப்பு எனப்படும் சிவப்பு நிற இனிப்பாக இருந்தால் இன்னும் நல்லது என்று நினைத்தது இன்றும் ஞாபகம் இருக்கிறது. ஆனால் படத்தில் இருந்து இனிப்பு ஒருநாளும் கொட்டவில்லை. கடவுளின் அவதாரமும் கான்சர் வந்து செத்துப் போய்விட்டார்.

சாமிகள் பலவிதம். சங்கராச்சாரி போன்ற பிராமண சாமிகளிற்கு அது பிறப்புரிமை. ஒரு நூலை தோளிலே போட்டால்போதும்.அது சாமிகளிற்கெல்லாம் சாமியாகிவிடும். ஜிட்டு கிருஸ்ணமூர்த்தி, ஓசோ போன்றவர்கள் உயர்மட்டத்தினருக்கான சுவாமிகள். ஆங்கிலத்தில் தத்துவங்களை அள்ளி விடுவார்கள். அறிவுபூர்வமாக சிந்திப்பவர்கள் என்று அவர்களின் பக்தகோடிகள் பெருமிதம் கொள்ளுவார்கள். மனிதர்களை சாதிகளாக பிரித்து இழிவு படுத்தும் இந்து மதத்தில் என்ன அறிவு இருக்கிறது கேட்டால் மறுமொழி இருக்காது. ஜக்கிவாசுதேவ் போன்ற சாமியார்கள் யோகாசனம், தியானம் என்று படம் காட்டுவார்கள். ஆன்மீகம், தியானம், மன அமைதிதான் வாழ்க்கைக்கு அவசியம் என்று பக்தர்களிற்கு போதிக்கும் இந்த சாமிகளின் வாழ்க்கைக்கு ஆன்மீகம் தேவை இல்லை. பணம் மட்டும் தான் தேவை. கோடிக்கணக்கில் சொத்து சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

பிராமணர் இல்லாத, சரளமாக பேசத்தெரியாத, யோகாசனம் செய்யத் தெரியாத சாமிகள் என்ன செய்யலாம். இதென்ன தமிழ்ப்படமா யாராவது பஞ்ட்டயலாக் எழுதித்தர அதை பொறிபறக்க பேசுவதற்கு அல்லது கதாநாயகனிற்கா கடுப்பு வந்து வீரசாகசம் பண்ணுவது போல டூப்வந்து யோகாசனம் பண்ணிக்காட்ட. ஆகவே ஆசாமிகள் ரூம்போட்டு யோசித்து ஆளுக்கொரு அவதாரம் எடுக்கிறார்கள். அமிர்தானந்தமாயி கட்டிப்பிடித்து அருளாசி வழங்குகிறார். பங்காரு சிவப்பு சேலை கட்டி அம்மன் வேசம் போடுகிறது. குடைச்சாமியார், விசிறிச்சாமியார், கஞ்சாசாமியார் என்று பட்டியல் நீள்கிறது.

குரங்காக இருந்த உயிரினம் உழைப்பின் மூலம் மனிதனாக மாறியது என்று பரிணாமதத்துவம் கூறுகிறது. லண்டன் மாநகரிலே மனிதனாக இருந்த உயிரினம் ஒன்று குரங்காக மாறிவிட்டது அது தன்னை அனுமான் சுவாமிகள் என்று அழைத்துக் கொள்கிறது. அனுமான் சுவாமி அருள்வாக்கு சொல்ல முதல் ஆ, ஊ என்று குரங்கு மொழி பேசும், உடம்பை வளைத்து, நெளித்து குரங்குச்சேட்டைவிடும். அது குரங்குச்சேட்டையாக இருக்கலாம் அல்லது தமிழ்ப்பட கதாநாயகர்கள் ஆடும் குத்துடான் ஸ்பார்த்ததினால் வந்தபாதிப்பாகவும் இருக்கலாம்.

குரங்குமாதிரி சத்தம் போட்டு, சேட்டைவிடும் அனுமான்சாமி குரங்குகளின் வழக்கப்படி மரத்தில்தான் தொங்கவேண்டும்.ஆனால்லண்டன் நகரசபை வேலையற்றவர்களிற்கு, ஆதரவற்றவர்களிற்கு, மாற்றுத்திறனாளிகளிற்கு இலவசமாக வசிக்கக் கொடுக்கும் வீடொன்றில் வசிக்கிறது. தசாவதாரத்தில் (கமலகாசன்படமல்ல) ஒருஅவதாரமானராமரின் உற்றதோழன், வைஸ்ணவர்களால் சிறிய திருவடி என்று அழைக்கப்படும் அனுமாரின் லண்டன் அவதாரம் அரசாங்கம் பணப்பற்றாக்குறை உள்ளவர்களிற்கு கொடுக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு பக்தர்களின் குறைகளை தீர்த்துவைக்கிறதாம்.



இதுவாவது பரவாயில்லை சாமகள் என்றாலே சோம்பேறிகள்தானே. உடம்பை வளைத்து வேலை செய்ய விரும்பாதவர்கள்தானே. அதனாலே வேலை இல்லாதவர்களிற்கு கொடுக்கும் அரசாங்க உதவிப்பணத்தை சாமிவாங்குவதிலே லைட்டாக ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால் புராணங்களின்படி அனுமார் ஒரிஜினல் பிரம்மச்சாரி. உலகத்து காடுகளில் பெண்குரங்குகளையே திரும்பிபாராத ஒரேகுரங்கு அனுமார்தான். லண்டன் அனுமாருக்கே மனைவி பிள்ளைகள் எல்லாம் இருக்கிறார்கள்.

லண்டன்பக்தகோடிகளிற்கு குறைதீர்த்தால் மட்டும் போதாது என்று அனுமான்சாமி இப்போது கனடாவிலும் ஒரு கிளை திறந்துவைத்திருக்கிறது. அனுமார் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஜம்ப்பண்ணி போனார் என்று கதை சொல்கிறது. லண்டன் அனுமார ஜம்ப்பண்ணுவதில்லை. விமானத்தில்தான்போகிறார்.தமிழ்நாட்டில ஏ.பி.ரி என்ற பார்சல் கம்பனிக்காரர்கள் சஞ்சீவிமலையை அனுமார தூக்கிக்கொண்டு பேகும் படத்தை போட்டு வேகமாக பார்சல் அனுப்பும் கம்பனி என்று விளம்பரம் போடுவது போல பிரிட்டிஷ் எயார்வேயும் லண்டன் அனுமாரின் படத்தை போட்டு அனுமாரே பயணம் செய்யும்

கம்பனி எங்கள் கம்பனிதான் என்று விளம்பரம் செய்யும் யோசனையில் இருக்குதாம்.

சாமியார்கள் என்றாலே கிளு கிளுப்புதான். லண்டன் அனுமாரிடம் பக்தர் ஒருவர் கவலையோடு போனார்.

"சாமி எனது மனைவி என்னை விட்டு விட்டு இன்னொருவரோடு வாழ்கிறா".

சாமி கொஞ்ச நேரம் கண்ணை மூடிதியானத்தில் ஆழ்ந்தது.

"கவலைப்படாதே, உனக்கு நடந்தது நல்ல விசயம் தான்,ஆனால் அதைவிட நல்லதாக ஒரு விசயம் நடக்கப் போகிறது"

"அப்ப எனது மனைவி திரும்பி வந்து விடுவாவா" பக்தர் சந்தேகப்பட்டுக் கேட்டார்.

"இல்லை உனது மனைவ உன்னை விட்டு போனதுபோல இப்போது சேர்ந்திருப்பவரையும் விட்டு விட்டு இன்னொருவருடன் போய்விடுவா".

ஒரு வாசகம் என்றாலும் திருவாசகம்.

"விளையும்பயிரைமுளையிலேதெரியும்" என்பது தமிழ் முதுமொழி .யாழ்ப்பாணத்து அராலியில் லண்டன் அனுமார் அவதரித்து வாழ்ந்தகாலங்களில் அவரோடுவாழும் பெருமை பெற்ற நண்பர்ஒருவர் சொன்னார்." அவர் அனுமாராக வருவார என்று எனக்கு அப்பவே தெரியும். ஏனென்றால் பெடியங்கள் மதகிலே இருந்து கதைக்கும் போது அவர் குந்திக்கொண்டிருப்பது குரங்கு குந்திக்கொண்டிருப்பது போலேயே இருக்கும்".

பசித்தவாய்க்கு சோறில்லாமல் பட்டினிகிடக்கும் நாட்டில், போரிலே வீடுகள் அழிந்து போக, இருக்க ஒரு குடிசை இல்லாமல் மக்கள் வாழும் நாட்டில் புதிதுபுதிதாக கோயில்களை கட்டுகிறார்கள். கோபுரங்களை எழுப்புகிறார்கள். மருதனார்மடத்திலே எழுபத்திரண்டு அடி உயரத்திலே அனுமார் வாயைபிளந்துகொண்டு நிற்கிறார். குங்குமம் சாயிபாபா, லண்டன் அனுமார் போன்ற சாமிகள் மக்களின் மூடநம்பிக்கைகளை வைத்து பிழைப்பு நடத்துகிறார்கள். பெரியார் போன்ற மக்கள் மொழி பேசிய ஒருபோர்வாளின் அவசியம் மீண்டும், மீண்டும் தமிழர்களிற்கு தேவைப்படுகிறது.

# மூலதன நுகர்வாக்கம், பெண்ணை காட்சிப்பொருளாக்கியுள்ளது



மார்க்சியம் - 11

மூலதனக் குவிப்பு நுகர்வை மனித சாரமாக்குகின்றது. நுகர்வோ பெண்ணை சதையாக்கி காட்சிப்பொருளாக்கியுள்ளது. இன்று பெண்ணின் சமூகநிலை சந்தையைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிப் பொருள். இன்றைய நுகர்வாக்க ஆணாதிக்க சமூகத்துக்கு முந்தைய தனிவுடமை அமைப்பில், தனிப்பட்ட ஆணின் சொத்தாக பெண் இருந்தாள். ஆனால் இன்று பெண் பொதுச் சொத்தாக்கப்படுகின்றாள். பெண்ணின் இந்த நிலையை பெண் "விடுதலையாகவும்" "சுதந்திரமாகவும்" மூலதனம் விளிக்கின்றது. பெண் விடுதலைக்கான போராட்டத்தை திரித்த மூலதனம், பெண்ணை தனிவுடமையின் சந்தைக்கேற்ற விளம்பர பொருளாக மாற்றுகின்றது. மூலதனம் சந்தைப் பொருளைப் போல், பெண்ணை சந்தைக்குரிய கவர்ச்சிப் பொருளாக்குகின்றது.

மனித உழைப்பைச் சுரண்டும் மூலதனம், கொடுக்கும் கூலியை மீண்டும் சந்தையில் வைத்து சூறையாட முற்படுகின்றது. மனித தேவையுடன் கூடிய நுகர்வை மறுத்து, தேவை கடந்த நுகர்வாக்கத்தை திணிப்பதே இன்றைய சந்தைக் கலாச்சாரம். கிடைக்கும் கூலியைக் கொண்டு, எப்படி நுகர்வது என்பதைக் கூட தனிவுடமையிலான மூலதன அமைப்பு மறுத்துவிடுகின்றது. மூலதனத்தைக் குவிப்பதை அடிப்படையாகக் கொண்ட நுகர்வாக்கத்தை மனிதன் மேல் திணித்து விடுகின்றது. பெருமூலதனத்தை அடிப்படையாகக் கொண்ட நுகர்வாக்கமே, சந்தையைக் கட்டுப்படுத்துகின்றது. அதாவது மனிதன் எதை எப்படி நுகர வேண்டும் என்பதைக் கூட தீர்மானிக்கின்றது.

மூலதனப் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறைமையிலான உள்ளடக்கம் இதுவாகும். இன்று உற்பத்திகள் தேவையின்பால் செய்யப்படுவதில்லை. மாறாக மூலதன பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றன. மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அடிப்படையிலோ அல்லது மக்கள் உழைத்து வாழும் சமூக அடிப்படையிலோ உற்பத்திகள் முன்னெடுக்கப்படுவதில்லை. மூலதனப் பெருக்கத்தின் அடிப்படையிலானதே இன்றைய உற்பத்திகள், தனிவுடமையிலான இந்த உற்பத்தி முறைமை. இங்கு மனிதர்கள் யார் என்றால், மூலதனத்தைப் பெருக்கும் கருவிகள். உழைப்பை சுரண்டுவதன் ஊடாக மட்டுமல்ல, நுகர்வைத் தூண்டுவதன் மூலமும் மூலதனத்தை பெருக்குவதே, தனிவுடமையிலான மூலதனத்தின் உள்ளடக்கமாகும்.

இந்த வகையில் நுகர்வாக்க சமூக அமைப்பில், ஆண் - பெண், இருவருமே மூலதனத்தை பெருக்கும் கருவிகள். இதற்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பில், தனிவுடமை சார்ந்து உருவான ஆணாதிக்கத்தை மூலதனம் தனது சந்தைக்குரியதாக்கி இருக்கிறது.

தாய்மை சார்ந்த மனித விருத்தியிலான பெண்ணாதிக்க அமைப்புக்குப் பதில், ஆணின் தனி உழைப்பு சார்ந்து உருவானதே தனிவுடமைச் சமூக அமைப்பு. ஆணின் தனிச்சொத்துரிமை, ஆணாதிக்க சமூகத்துக்கு இட்டுச்சென்றது. அதாவது இயற்கையிலான ஆண்-பெண் பாலியல் நாட்டம் மூலமான மனித விருத்தி என்பது, ஆணின் தனிவுடமைக்குள் பெண் ஆணைச் சார்ந்து வாழும் நிலையை உருவாக்கியதன் மூலம், ஆணாதிக்க சமூகம் உருவானது.

ஆணாதிக்க தனிவுடமைச் சமூக அமைப்பில் ஆணின் மேலாதிக்கம், ஆணின் பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலைக்கு பெண்ணின் நிலையை மாற்றியது. இதன் வளர்ச்சி என்பது, ஆணின் சொத்தாக பெண்ணை மாற்றியது. ஆணின் தனிவுடமைக்கான ஆண் வாரிசு, தனது இரத்த உரித்தாக இருக்க வேண்டும் என்ற தனிவுடமைக் கண்ணோட்டம், பெண்ணை ஆணின் தனிவுடமையாக்கியது.

தனிவுடமை அமைப்பில் ஆண் சார்ந்து குடும்பம் மூலம் பெருகிய தனிச் சொத்துடமை, குடும்பத்துடன் தன்னை முடக்கிவிடவில்லை. அது தன்னை பெருக்கிக்கொள்ள குடும்பத்துக்கு வெளியிலும் வளர்ச்சியுற்ற போது, குடும்பங்கள் தனிச் சொத்துடமையை இழக்கத் தொடங்கின. அதாவது குடும்பத்துக்கு வெளியில் தனிச்சொத்துரிமையின் பெருக்கம், மற்றொரு குடும்பத்தின் இழப்பாகும். தனிச்சொத்துரிமை தனிப்பட்ட குடும்பத்துக்கு வெளியில் குவியத் தொடங்கியது.

சொத்துடமையையும், உழைப்பையும் இழத்தலே தனிவுடமையின் சொந்த விதி. தனிவுடமையின் சுதந்திரம் என்பது, மற்றவரிடம் உள்ள தனிவுடமையைப் பறித்தெடுத்துக் குவித்தல் தான். ஆண் தனிச்சொத்துடமையை இழந்து மூலதனத்தின் கூலியாக மாறிய போதும், ஆணின் தனிவுடமை சார்ந்து உருவான குடும்ப வடிவங்கள் தொடர்ந்து நீடித்தன. இங்கு

1.ஆண் மட்டும் கூலிக்கு செல்வதும், ஆணின் வருமானமே குடும்பத்தின் தீர்மானகரமான நிர்ணயமான ஒன்றாக இருந்தது.

2.இயற்கை சார்ந்த இனப்பெருக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாக, அது தொடர்ந்து குடும்ப வடிவிலும் நீடித்தது. ஆண் தனிச்சொத்துடமை இழந்து கூலியான போதும், ஆணின் பொருளாதாரம் சார்ந்து குடும்பத்தினுள் பெண் வாழ்வதே சமூக முறைமையாக நீடித்தது.

ஆண் கூலியாக மாறிய போதும், ஆண் தலைமையிலான ஆணாதிக்க குடும்பமாகவே குடும்பம் நீடித்தது. முந்தைய ஆணாதிக்க பண்பாட்டு கலச்சார வழியில், ஆண் மேலாதிக்கம் கொண்ட தனிவுடமைக் குடும்பமாகவே நீடித்தது. பெண் ஆணின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யவும், வீட்டுப் பராமரிப்பு தேவைகளைப் பூர்த்தி செய்ய மேலதிகமாக உழைக்கவும் குடும்பம் கோரியது. அதாவது ஆணின் கூலியைக் கொண்டு குடும்பத்தை பாரமரிக்க முடியாத நிலையில் பெண் இருந்ததுடன், அந்தச் சுமையை தானே ஏற்க வேண்டிய நிலையில் பெண் இருந்தாள். பெண் இனப்பெருக்கம் சார்ந்த சமூக உயிரி என்ற வகையில், குடும்பத்தை பராமரிக்கும் நிலையில் இருந்த பெண் மீது, மூலதனக் குவிப்பு மூலமான சுமையை பெண் மீது திணித்தது.

தொடர்ச்சியாக மூலதனத்தின் பெருக்கமும், உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியிலும் ஏஇது ஒரு புறமிருக்க, புலம்பெயர்

புலிகளின் சொத்துக்களை அமுக்கிய பினாமிகளும் அவர்களின் ஊடகங்களும்

மறைமுகமாக இலங்கை அரசு சொல்வது

போல புலி திரும்பவும் வந்து விட்டதாக கதையளக்கத் தொடங்கியுள்ளனர். சிலர் தலைவர் வரும் வேளை வந்து விட்டதாகவும், ஆபிரிக்காவிலிருந்து சில ஆயிரம் வீரகளுடன் அவர் களம் புகப்போவதாகவும் கூட கதைவிடத் தொடங்கியுள்ளனர்.ற்பட்ட ஏற்றத்தாழ்வான தன்மையாலும், மேலாதிக்க உழைப்புச் சக்தியை மூலதனம் கோரியது. ஆண் மட்டும் உழைப்புச் சக்தி வழங்கும் ஆணாதிக்க சமூக அமைப்பு முறைமை, மூலதனத்தின் விரிவாக்கத்துக்கு முரணாகியது. மூலதனமோ பெண்ணின் உழைப்பைக் கோரியதன் மூலம், வீட்டுக்கு வெளியில் பெண்ணின் உழைப்பை மூலதனம் கொண்டு வந்தது. குடும்பத்துக்கான பெண்ணின் உழைப்புக்கு வெளியில், மூலதனம் பெண்ணின் உழைப்பை கோரத் தொடங்கியது. ஆண் போல் பெண்ணும் தன் உழைப்புக்கு கூலியை பெற்றதன் மூலம், அவளை ஆணாதிக்க குடும்பத்தில் இருந்து விடுவிக்கவில்லை. அவளின் கூலி ஆணை விட குறைவாக இருந்ததுடன்,



இயற்கையான இனவிருத்தியிலான குடும்பத்தை பராமிக்க அவளின் கூலி போதாமல் இருந்தது. இது மட்டுமல்ல குழந்தைகள் ஆணின் சொத்தாகவும், பெண்ணின் கூலி ஆணின் உரிமையாகவும் இருந்தது.

இங்கு பெண் என்பவள் ஆணின் தனிச்சொத்தாகும். பழைய ஆணாதிக்க சமூக வடிவில், பெண் தனது குழந்தைக்கோ தனது கூலிக்கோ உரிமை கொண்டவள் அல்ல. அத்துடன் அவள் வெளியில் வேலை செய்தாலும், வீட்டு வேலையை அவளே செய்ய வேண்டிய இரட்டைச் சுமையைத் தான், மூலதனம் பெண் மீது திணித்தது.

தொடர்ச்சியாக மூலதனத்தின் குவிப்பாலும், உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியாலும், பெண்ணின் இரட்டைச் சுமையிலான வீட்டு வேலையிலான அழுத்தத்தைக் குறைத்த போதும் கூட, பெண்ணின் நிலையை அது மாற்றிவிடவில்லை. நீண்ட போராட்டங்கள் மூலம் பெண் தனது குழந்தை மீதான உரிமையையும், தன் கூலி மீதான உரிமையைப் பெற்ற போதும், தனிவுடமை சார்ந்து உருவான ஆணாதிக்க சமூக அமைப்புக்கு வெளியில் வாழ முடியாத வண்ணம் பெண்ணின் நிலை தொடர்ந்தது.

மூலதனத்தைக் குவிக்கும் உற்பத்தி முறைமையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சம கூலி அங்கீகரிக்கப்படவில்லை. இருந்தபோதும், இன்று மூலதனத்தின் விரிவாக்க நலனுக்குள் சில பெண்கள் அதிகம் கூலியைப் பெற்ற போதும், குடும்பத்துக்கு வெளியில் பெண்கள் தனித்து வாழ்கின்ற போதும் தனிவுடமையிலான ஆணாதிக்க அமைப்பிற்கு வெளியில் பெண் சுதந்திரமாக வாழ முடிவதில்லை. அதாவது தனிப்பட்ட ஆணுக்கு வெளியில் பெண் வாழ்ந்த போதும், தனிவுடமையிலான ஆணாதிக்க அமைப்புக்கு வெளியில் பெண்ணால் வாழ முடிவதில்லை.

மூலதனத்தைக் குவிக்கும் உற்பத்தி அமைப்பில், பெண்ணின் "சுதந்திரம்"

15 ஆம் பக்கம் பார்க்க...





# மகிந்தாவின் புலி வேட்டையும் விளக்குப்பிடிக்கும் கோடாலிக்காம்புகளும்!

கடந்த இரு மாதங்களாக மறுபடியும் அறிவிக்கப்படாத யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியில் ஆரம்பித்து வடக்கு கிழக்கு ஊடாகத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த தேசம் வரை இலங்கை அரசின் யுத்தக்களம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது .

பங்குனி மாதம் நடுப்பகுதியில் இலங்கை அரசு கிளிநொச்சியில் மிகச்சிரமப்பட்டு தற்போதைய அறிவிக்கப்படாத யுத்தத்தின் முதலாவது நகர்வை மேற்கொண்டது. விறுவிறுப்பான துப்பறியும் திரைப்படத்துக்கு இணையாக அந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டது. அதன் திரைக்கதை இப்படிப் போகின்றது.

கிளிநொச்சி தர்மபுரத்தில் இடம்பெற்றதாக பொலிஸாரால் கூறப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தைத் தொடர்ந்து பா.ஜெயகுமாரி மற்றும் 13 வயதே நிரம்பிய அவரது மகள் விபூசிகா இருவரும் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர் ஒருவரைத் தேடிச் சென்ற சமயம் அவர் ஜெயகுமாரியின் வீட்டில் இருந்து பொலிஸாரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டார் என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

கைது செய்யப்பட்ட தாயாரின் வாக்குமூலம்: ”சம்பவம் இடம்பெற்ற அன்று பி.ப 3.30 மணியளவில், எனது பிள்ளைக்கு உணவூட்டிக் கொண்டிருந்தேன். அப்போது உயரமான ஒருவர் கறுப்பு நிற ஜக்கெட்டுடன் வீட்டுச் சுவருக்கு மேலாக ஏறிப் பாய்ந்து உள்ளே வந்தார். உடனே நான் எனது மகளைக் கூட்டிக் கொண்டு வீட்டுக் கேற்றுக்கு வெளியில் வந்தேன். அப்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் வாகனத்துடன் வெளியில் நின்றிருந்தனர். அவர்கள் எனது பெயரைச் சொல்லாமல், எனது பெயர் போன்ற வேறு ஒருவரின் பெயரைச் சொல்லி அவரின் வீடு இதுவா என்று கேட்டனர். அதற்கு நான் பதில் சொல்வதற்கிடையில், எனது பெயரைச் சொல்லி அவரது வீடு இதுவா என்று கேட்க, குறித்த பெயருக்கு உரியவர் நான் தான் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். உடனேயே வாகனத்துக்கு அருகில் எங்களை இருத்தி விட்டு அவர்கள் வீட்டினுள் சென்றனர். அவர்கள் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் இரண்டு துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன. அதன் பின்னர் பெருமளவான பொலிஸாரும், இராணுவத்தினரும் வந்து எங்களை விசாரித்தனர். மதிலேறிக் குதித்து வந்த நபரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது” என்றார்.

அதேபோன்று மகளும் மதில் ஏறிக் குறித்த நபரை தனக்குத் தெரியாதென்று பதில் நீதிவான் முன்பாக தெரிவித்தார். ஜெயகுமாரிக்கு எதிராகப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தாக்கல் செய்துள்ள ”பி“ அறிக்கையில் குறித்த வீட்டில் வெடிபொருள்களை இனங்காணும் கருவி, துண்டுப்பிரசுரங்கள் காணப்பட்டன என்றும் அங்கேயே துப்பாக்கிச்சூடு நடந்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இதன் பின் தாயார் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பூசா முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். மகள் விபூசிக்கா அனாதைச் சிறுவர் விடுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இக்கைதின் பின்வந்த நாட்களில் வடக்கில் புலிவேட்டை-2014 என்ற யுத்தக்களம் திறக்கப்பட்டது. வடக்கில் பரவலாக சில குறிப்பிட்ட நபர்களின் படங்கள் சுவரொட்டிகளில் பிரசுரிக்கப்பட்டு அவர்கள் தேடப்படுவதாக மஹிந்த அரசு அறிவித்தது. அத்துடன் பயங்கரவாதத்துடன் தொடர்புள்ளவர்களாகக் கணிக்கப்படும் அவர்களைக் காட்டிக் கொடுத்தால் ஐந்து இலட்சத்திலிருந்து ஒரு மில்லியன் வரை பரிசு தருவதாகவும் அரசு அறிவித்தது.

80-களை நினைவூட்டும் வகையிலான சுற்றி வளைப்புக்கள் மன்னார் மாவடத்தில் தொடங்கி வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் அரங்கேற்றப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவிலும் தேடப்படுபவர்கள் என்று சொல்லப்படுபவர்களின் குடும்பத்தவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 65 வயது வயோதிபத் தாய், யுத்தத்தில் படுகாயமடைந்து பிணியுடன் வாடும் ஒரு வயோதிபப் பெண் மற்றும் இளம் கர்ப்பிணி ஒருவரும் உள்ளடங்கும். அக் கர்ப்பிணிக்கு சரியான மருத்துவக் கவனிப்பு வழங்கப்படாததனாலும், விசாரணை என்ற பெயரில் நடாத்தப்பட்ட உடல்-உள நெருக்கடிகளினாலும் கருச்சிதைவு ஏற்பட்டதாக மனித உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அதிமுக்கிய மருத்துவத் தேவை உள்ளவரான, மேற்கூறியபடி யுத்தத்தில் காயமடைந்து இன்று அதனால் உடற்பிணியுடன் வாடுபவருக்கும் அடிப்படை மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டதாக மனித உரிமைக் கண்காணிப்பு நிறுவனங்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளன. இவ்வாறு மருத்துவ உதவி மறுக்கப்பட்ட வயோதிப பெண்ணும், கருச்சிதைவுக்கு உள்ளான இளம் பெண்ணும் புலிகளில் இன்றைய தலைவர் என அரசினால் படங்காட்டப்படுபவரின் மனைவியும் தாயும் என அரச புலனாய்வுப் பிரிவினால் கூறப்பட்டது. இவ்விடையம் நடைபெற்று இரண்டு நாட்களின் பின் 10.04.2014 அன்று வவுனியாவில் மேலும் இரண்டு பெண்கள் பயங்கரவாதப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். வவுனியாவைச் சேர்ந்த சசிகரன் தங்கமலர் (வயது 52) மற்றும் அவரது மகளான சசிகரன் யதுர்சினி (வயது 16) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் என்று கூறப்படும் ஒருவர் வவுனியாவில் குறித்த வீட்டில் தங்கியிருந்தார் என்று கூறப்பட்டது. அது தொடர்பாகவே குறித்த தாயும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தக் கைதுகளுடன் இதுவரை 8 பெண்களும் 2 குழந்தைகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூறியுள்ளன.

தொடர்ந்து யாழ்- வட்டுகோட்டையில் நடந்த சுற்றிவளைப்பில் தேடப்படுபவர்கள் இருவரின் நெருங்கிய சகா எனச் சொல்லப்படுபவர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. சித்திரை நடுப்பகுதியில் யாழ்- வடகரைப் பகுதியைச் சேர்ந்த கடல் தொழிலாளர்கள் 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் மூவர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகும். சித்திரை 2வது வாரம் வரை வடக்கிலும் கிழக்கிலும் 68 பேர் வரை கைது செய்யப்பட்டதாக உத்தியோகப்பற்றற்ற வட்டாரங்களும், மனித உரிமையாளர்களும் கூறுகின்றனர். ஆனால் தாம் அவ்வளவு தொகையினரைக் கைது செய்யவில்லையென மஹிந்த அரசு மறுத்தது. ஆனால் தாம் பயங்கரவாதச் செயலில் ஈடுபடுபவர்கள் அல்லது விடுதலைப்புலிகளை மீளவும் ஒன்றிணைக்க முயற்சிப்பவர்களுக்கு உதவிகள் வழங்கியதாகக் கூறி, 65 பேரைக் கைது செய்ததாக காவல்துறைப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார். இவர்களில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும், மிஞ்சிய 60 பேரில் பத்துப் பேர் பெண்கள் என்றும் காவல்துறை பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

மேற்படி புலிவேட்டையை இலங்கையில் நடத்தியபடி இலங்கை அரச அதிகார வர்க்கம், தனது வேட்டைக்களத்தை சர்வதேசரீதியாகவும் விரிவுபடுத்தியது.

> **“ இது ஒரு புறமிருக்க, புலம்பெயர் புலிகளின் சொத்துக்களை அமுக்கிய பினாமிகளும் அவர்களின் ஊடகங்களும் மறைமுகமாக இலங்கை அரசு சொல்வது போல புலி திரும்பவும் வந்து விட்டதாக கதையளக்கத் தொடங்கியுள்ளனர் சிலர் தலைவர் வரும்வேளை வந்து விட்டதாகவும், ஆபிரிக்காவிலிருந்து சில ஆயிரம் வீரகளுடன் அவர் களம் புகப்போவதாகவும் கூட கதைவிடத் தொடங்கியுள்ளனர். ”**

நோர்வேயில் வாழுவதாக கூறப்படும், புலம்பெயர் புலி அமைப்பின் பல குழுக்களில் ஒரு குழுவின் தலைவரான நெடியவனின் வலதுகை என அரசால் கூறப்படுபவர் ஈரானில் கைது செய்யப்பட்டு மலேசியா ஊடாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார் என பாதுகாப்பு வட்டாரம் கூறியது. அத்துடன் புலிகள் சார்ந்த புலம்பெயர் அரசியல் மற்றும் பொருளாதாரா செயற்பாட்டாளர்கள் மற்றும் புலிகளின் அரசியலை முன்னெடுப்பதாகக் கூறப்படும் அமைப்புகள் சிலவும் இலங்கை அரசால் தடைசெய்யப்பட்டன. இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செய்ய முடியாத நிலையில், ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டு இன்று பெரும்பாலும் பயன்பாட்டில் இல்லாமல் உறங்கும் சில சர்வதேச விதிகளுக்கமையவே இத்தடை விதிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பில் வெளியிடப்பட்டுள்ள பிரகடனங்களுக்கு அமையவே புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக, மஹிந்த அரசின் வலதுகையான பாதுகாப்பு செயலாளரின் செல்லப்பிள்ளை தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண பகிரங்கமாகவே அறிக்கையும் விட்டார்.

இலங்கையில் நடக்கும் கைதுகளும், சர்வதேச தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை முடக்க முயல்வதுவும், மஹிந்த அரசானது புலிப்பூச்சாண்டி காட்டித் தொடர்ந்தும் தனது இனவாத அரசியலைத் தொடர்வதற்காகவே என்பது வெளிப்படையான உண்மை. அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட, யுத்தத்தில் சர்வதேச மனித உரிமை விதிகள் மீறப்பட்டமை சார்ந்து இலங்கை அரசை விமர்சிக்கும் தீர்மானத்தை உள்நாட்டு அரசியலாக்குவது, தொடர்ந்தும் வடக்குக் கிழக்கில் இராணுவத்தை நிலைநிறுத்த வேண்டிய தேவை போன்ற விடையங்களையும் கணக்கில் கொண்டே புலிவேட்டையையும், அறிவிக்கப்படாத யுத்தத்தையும் இலங்கை அரசு நடாத்துகிறது.

அதேவேளை 2009 முன்பு யுத்தகாலத்தில், இலங்கை அரசின் இனவாத அரசியலுக்கும், யுத்தவெறிக்கும் எண்ணை வார்த்த தமிழ்பேசும் புலம்பெயர் அரசியல் தரகர்கள், 2009-க்குப் பின்பு விலாசமில்லாமல் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்டார்கள். தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் கைத்தடிகளான இவர்களும் புலிவேட்டையில் தாமாகவே இலங்கை அரசிற்கு உதவி புரியும் வேலைகளில் இறங்கினர். உதாரணமாக இணையத் தளங்கள் நடத்துவோர், ஊடகவியலாளர் எனத் தம்மை அடையாளப்படுத்துவோர் தொடக்கம் கவிஞர்கள், இலக்கியவாதிகள் எனத் தம்மைப் பற்றிப் பறைதட்டுவோர் வரை தற்போது அரசிற்காகப் பிரச்சாரம் செய்கின்றனர். கைது செய்யப்பட்டோர் பற்றி அரசின் அதிகார வர்க்கமும் அதன் ஊடகங்களும் கூடச் சொல்லாத விடயங்களை இவர்கள் எழுதுகின்றனர். கைது செய்யப்பட்டோர் அரசு சொல்வது போல புலிகள் தான் என நிருபிக்கும் வகையில் செய்திகளையும், ஆய்வுகளையும் வெளியிடுகின்றனர். இலங்கை அரசால் வெளியிடப்பட்ட- இலங்கைக்கு வர முடியாமல் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழர் பற்றிய அரச வர்த்தமானி வெளியிடப்பட்ட பின் இக்கைத்தடிகளே அவ் வர்த்தமானி அறிவிப்பில் விடுபட்டவர்கள் என இவர்கள் கருதுபவர்களையும், தம்முடன் அரசியல் மற்றும் தனிப்பட்ட முறையில் முரண்பட்ட எதிரிகளின் பெயர்களையும் பாதுகாப்பு அமைச்சுக்கு நேரடியாகவும், இலங்கையின் தூதரகங்கள் மூலமாகவும் அனுப்புவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. முன்பு புலிகளின் ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் புலிகளை வைத்து மிரட்டியது போல- இப்போ மாறி நடக்கிறது. இதனால் பாதிக்கப்படுவது புலிகள் சார்ந்த அதிகார - மேற்தட்டு வர்க்கமோ அல்லது இலங்கை அரச அடிவருடிகளோ அல்ல. ஒடுக்குமுறையால் ஏற்பட்ட இன உணர்வால் உந்தப்பட்டு, எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல்- புலிகளுக்கு உதவிய புலம்பெயர்ந்து வாழும் சாதாரண உழைக்கும் மக்களே.

இது ஒரு புறமிருக்க, புலம்பெயர் புலிகளின் சொத்துக்களை அமுக்கிய பினாமிகளும் அவர்களின் ஊடகங்களும் மறைமுகமாக இலங்கை அரசு சொல்வது போல புலி திரும்பவும் வந்து விட்டதாக கதையளக்கத் தொடங்கியுள்ளனர். சிலர் தலைவர் வரும் வேளை வந்து விட்டதாகவும், ஆபிரிக்காவிலிருந்து சில ஆயிரம் வீரகளுடன் அவர் களம் புகப்போவதாகவும் கூட கதைவிடத் தொடங்கியுள்ளனர். இவர்களின் ஒரே நோக்கு இப்போதுள்ள பினாமிப் பணத்தை இன்னும் பெருக்குவதேயாகும். இதன் அடிப்படையில், ஆடிய காலும், பாடிய வாயும் சும்மா இராது என்பது போல, மறுபடியும் புலம்பெயர் தமிழ் உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டி- தமிழ் தேசிய விடுதலையை முன்னிறுத்திக் காசு பார்ப்பதே இவர்களின் திட்டமாகும். அத்துடன் இலங்கையில் ஏதாவது ஒரு வகையில் இனமுரண்பாடு தொடர்ந்தும் இருந்து கொண்டே இருப்பதே இவர்களின் இருப்புக்குத் தேவையாக உள்ளது. இந்த வகையில் மஹிந்த அரசின் தேவையும் இவர்களின் தேவையும் ஒன்றாகவே

13 ஆம் பக்கம் பார்க்க...



# மேதின நினைவுகள்... திருமதி சாந்தா சிவநாதனுடன் சில நிமிடங்கள்...

எனக்கு அப்போது பதினைந்தோ பதினாறோ வயதிருக்கலாம். எனக்கு அரசியலில் ஈடுபாடுகள் தொடங்கிய நேரம். எங்கடை வாசிகசாலையில் இருந்து சில பேர் கழுத்திலேயும் சில பேர் தலையிலும் சிவப்புத் துணிகளைக் கட்டிக் கொண்டு, சில தோழர்கள் சிவத்தக் கொடியையும் தூக்கிக் கொண்டு ஏற வான் புறப்படும். புறப்பட்ட வான் அயல் கிராமங்களிலிருந்தும் பல தோழர் தோழியர்களையும் ஏற்றிச் கொண்டு ஊர்வலம் நடக்கும் இடத்தைச் சென்றடையும்.

அப்படிப் போய் வந்தவர்களில் நெருங்கிய தோழன் சிவநாதன் அவர்கள். இன்று அவர் இந்த உலகத்தை விட்டு சென்று விட்டார். அந்தத் தோழனின் துணைவியைக் காணும் போதெல்லாம் என் நினைவுக்கு வருவதெல்லாம் அந்த மேதின ஊர்வலங்களும் அங்கு போட்ட கோசங்களும் தான். எத்தனையோ மேதின ஊர்வலங்கள் எத்தனையோ வெகுஜனப் போராட்டங்கள் எத்தனையோ தேசிய எதிர்ப்புப் போராட்டங்கள்.

தன்னுடைய கணவனுடன் தோளோடு தோளாய் நின்று பல பணிகளில் துணைபுரிந்த தோழி திருமதி சாந்தா சிவநாதனுடன் சில நிமிடங்கள்.

**மேதினம் என்றதும் தங்கள் நினைவில் வருவது....?**

முதலில் வருவது தோழர்கள் சண்முகதாஸன், இக்பால், சலீம், கே. டானியல் போன்றவர்களும் மற்றும் அடிக்கடி வந்து பழகிப்போன சிங்களத் தோழர்களும் தான்.

உண்மையில் அது ஒரு வசந்த காலம். மேதின ஊர்வலத்துக்குப் போகிறோம் என்ற உணர்வை விட ஏதோ ஒரு பெருவிழாவுக்குப் போகின்றோம் என்ற உணர்வே மேலோங்கி நிற்கும். எனது கணவரும் அவரது தோழர்களும், முதற்கிழமையே எல்லா ஆயத்த வேலைகளையும் ஆரம்பிக்க எல்லாம் களைகட்டிவிடும்.

எங்கள் வள்ளத்தில் வந்து வேலை செய்த சிங்களத் தோழர்களும் எம்மோடு சேர்ந்து களத்தில் இறங்கி விடுவார்கள். அத்தோடு அயல் கிராமத்து தோழர் தோழியர்களை பார்க்கப் போகின்றோம் சந்திக்கப் போகின்றோம் என்ற உணர்வு மேலோங்கி நிற்கும்.

**யார் அந்தத் தோழர்கள்...?**

எனது கணவனின் கட்சியில் இருந்த சில சிங்களத் தோழர்கள்

> **“ இரண்டாவதாக யாழ் மண்ணிலே வேரோடியிருக்கும் சாதிய பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடும் போது அடித்தால் திருப்பி அடிப்போம் என்ற கொள்கையை முன்னெடுத்த கட்சியை எப்படி இந்த யாழ் மேட்டுக்குடியினர் ஏற்றுக் கொள்வார்கள். இது ஒரு மிக முக்கிய காரணமாய் இருந்தது. ”**

எங்கள் வள்ளத்தில் வந்து வேலை செய்தவர்கள். எப்போதாவது கிடைக்கும் லீவு காலங்களில் மாத்திரம் ஊர் போய் வருவார்கள். அரசியல் வேலை நிமித்தம் காரணமாக எங்களோடு குடும்பமாகவே வந்து வாழ்ந்தவர்கள். இக்பால், சலீம் போன்ற முஸ்லீம் தோழர்களும் எம்மோடு வந்து அரசியல் வேலை செய்தவர்கள்.

பின்னர் தமிழ் இயக்கங்கள் வளரத் தொடங்க, சிங்கள தமிழ் முரண்பாடுகளும் மேலோங்க அந்தத் தோழர்கள் இருக்க முடியாத சூழல் உருவாக..... இப்ப தெரியும் தானே இன்று இந்த இருண்ட நிலைக்கு எல்லோரும் தள்ளப்பட்டிருக்கிறம்.

**அன்றிருந்த தமிழ் சிங்கள உறவுகள் இன்றிருக்கும் தமிழ் சிங்கள உறவுகள் பற்றி இப்ப என்ன நினைக்கின்றீர்கள்....?**

இனிமேல் இந்த இரண்டு இனங்களும் சேர்ந்து வாழ முடியாது என்றவொரு மாயத் தோற்றத்தை சிங்களத் தலைமைப்பீடங்களும் அன்றிருந்த தமிழ்த் தலைமைப்பீடங்கள் தொடக்கம் அழிந்து போன தமிழ் இயக்கங்கள் வரை இந்த மாயையை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆனால் உண்மை அதுவல்ல. காலம் காலமாக இந்த அரசுகள் எப்படி இந்த தமிழ் மக்களை ஒடுக்கி நசுக்கி அடக்கி ஆளுகின்றனவோ அப்படித்தான் சிங்கள மக்களையும் அடக்கி ஆண்டு கொண்டிருக்கின்றன.

எனக்கு இப்பவும் நல்ல ஞாபகம் இருக்கின்றது. அன்று ஒரு நாள் ஜே.ஆரின் ஆட்சியை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தின எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய பல தமிழ் தலைவர்கள் ஜே.ஆர் அரசின் விலைவாசி ஏற்றத்தினால் தமிழ் மக்கள் மிகவும் கஸ்டப்படுகின்றார்கள் என்றும் தமிழ் மக்கள் பட்டினியால் துன்புறுகிறார்கள் என்றும், அரசானது தமிழ் மக்களுக்கு எதிரானது என்ற கருத்துப்பட பேசிய போது, தோழர் சண்முகதாஸன் அவர்கள் தான் இந்த விலையேற்றமும் பசி, பட்டினிக் கொடுமைகளும் சிங்கள மக்களுக்கும் தான் என்று பேசிய போது அந்தக் கூட்டமே அதிரும்படி எழுந்த சிரிப்பொலியும் கரகோசமும் என்னால் இன்றும் மறக்க முடியாது.

அதேநேரத்தில் விடுதலைப்புலிகளின் திண்ணைவேலித் தாக்குதலின் காரணத்தினால் தான் 83 இனக்கலவரம் ஏற்பட்டது என்று பலர் பேசிய போது அதற்கு முன்னர் நடைபெற்ற கலவரங்களுக்கு யார் காரணம் என்று கேட்டு முன்னர் நடந்த இனக்கலவரங்களுக்கெல்லாம் எங்கே விடுதலைப்புலிகள் தாக்கினார்கள் என்ற கேள்வியை எழுப்பியதோடு மட்டுமல்லாது இலங்கைக்கு ஆயுதப் போராட்டம் தான் சிறந்த வழி என்ற கருத்தையும் பகிரங்கமாகவே தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற கலவரங்களின் போதெல்லாம் பல சிங்கள மக்கள் தான் தமிழ் மக்களை காப்பாற்றி பாதுகாத்து அனுப்பி வைத்தார்கள் என்பதை மறந்து விட முடியாது. அவ்வளவும் நடைபெற்ற பிறகும் திரும்பவும் தமிழ் மக்கள் போய் தெற்கில் மீண்டும் வாழ்கின்றனர் தானே. காரணம் என்ன... நாங்கள் சேர்ந்து வாழலாம் என்ற அந்த நம்பிக்கை தான். நிட்சயமாக நாங்கள் சேர்ந்து வாழலாம்.

**நானொரு கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். தமிழர்கள் எல்லாம் ஒற்றுமையாய் இருக்கிறீர்களா.......?** என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார்.

பதிலொன்றும் பேசாது சிரித்துக் கொண்ட நான் இதையேன் என்னிடம் கேட்கிறீர்கள்.....,? என்று நானே அவரிடம் திருப்பிக் கேட்டேன்.

இல்லை, தமிழ்ப் போராட்டம் என்று ஒன்று உருவாகுவதற்கு முன்னர் என்னுடைய கணவனும் அவரது பல தோழர்களும் ஆயுதம் எடுத்துப் போராடியது எனக்கு நன்றாகவே தெரியும். தமிழருக்கு எதிராக போராடிய போராட்டம் அது.

எப்போதாவது கூட்டம் என்றும் சந்திப்புக்கள் என்றும் போய்விடுவார்.... சில நாட்கள் கழித்துத் தான் வருவார். வரும் போது சில தோழர்களும் வந்து தங்குவார்கள். அது பற்றி எனக்கு முதலில் தெரியாது பின்னர் தான் அந்த ரகசியங்கள் எனக்குத் தெரிந்தன.

தமிழர்கள் மத்தியில் திறக்கப்படாத பல கோவில்கள் திறக்கப்பட்டன, பல தேநீர் கடைகள் எல்லாம் திறக்கப்பட்டதற்கு அந்தப் போராட்டங்கள் தான் காரணம். ஆனால் இன்று வரையும் அந்தப் பிரச்சினைகள் முடியவில்லை...... ஏன் இந்தப் புலம்பெயர் சமூகத்தில் கூட இந்தச் சாதிகளைக் கொண்டு வந்து தமிழ்ச் சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது தானே.

இன்று இவ்வளவும் நடைபெற்ற பிறகும் கூட நான் பெரிது நீ பெரிது என்று நினைக்கும் இந்த தமிழ் சமூகத்தை நினைக்கும் போது கவலைப்படுவதை விட அதிகம் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

இன்று அந்தக் கம்யூனிஸக் கட்சியும் அதன் போராட்டங்களும் பெரிதாக முன்னிலைக்கு வராமல் இல்லாதழிந்து போனது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.

முதலில் எங்கள் கிராமத்திலும் மற்றைய அயல் கிராமங்களிலும் உள்ள பெரும்பான்மையானவர்கள் மத்தியில் இந்தக் கம்யூனிசவாதிகள் என்றால் கடவுளுக்கும் மதங்களுக்கும் எதிரானவர்கள், தெய்வங்கள் இல்லையென்பவர்கள், கோவில்களுக்கு எதிரானவர்கள் போன்ற தப்பான அபிப்பிராயங்கள் சாதாரண பொது மக்களிடத்தில் இருந்தது. வழிக்கு வழி தெருவுக்குத் தெரு வழிபாட்டுத்தலங்கள் நிறைந்து காணப்படும் எம்மவர் மத்தியில் இவர்களது செயற்பாடுகளும் வேலைமுறைகளும் எடுபடுவது கஸ்டமான காரியம்தான்.

இரண்டாவதாக யாழ் மண்ணிலே வேரோடியிருக்கும் சாதிய பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடும் போது அடித்தால் திருப்பி அடிப்போம் என்ற கொள்கையை முன்னெடுத்த கட்சியை எப்படி இந்த யாழ் மேட்டுக்குடியினர் ஏற்றுக் கொள்வார்கள். இது ஒரு மிக முக்கிய காரணமாய் இருந்தது.

அடுத்ததாக தமிழீழ இயக்கங்களின் வளர்ச்சி. அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் அகிம்சை மூலம் தான் தமிழீழம் எடுத்துத் தருவோம் என்ற போது ஆயதப்போராட்டத்தை முன்னெடுத்த தமிழ் இளைஞர்கள் அந்த நேரங்களில் பொலிசையும் ஆமியையும் சுட வெளிக்கிட, எங்கள் எதிரிகள் கொல்லப்படுகிறார்கள் என்று மக்களும் நம்பி அவர்களை ஆதரிக்க தமிழ் இயக்கங்கள் வளர இந்தக்கட்சியின் ஆதரவுகள் குறைந்தது உண்மை தான்.

இந்த மாற்றம் சிங்கள மக்கள் மத்தியில் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணவில்லை, ஆனால் சர்வதேசப் பிரச்சினைகளால் கட்சிகளில் நிகழ்ந்த மாற்றங்களும் சண் அவர்களின் மறைவும் பெரிய காரணங்களாய் இருந்தது என்று நினைக்கின்றேன்.

**தமிழீழ விடுதலை இயக்கங்கள் பற்றிய உங்கள் கருத்து....?**

இயக்க ஆரம்ப காலங்களில் பல இயக்கத்தினர், என் கணவனுடனும் அவரது மற்றைய தோழர்களுடனும் வந்து கதைப்பார்கள், பல விவாதங்களை நடத்தியிருக்கிறார்கள். அப்போது எங்கள் தோழர்கள் இந்தத் தமிழீழப் போராட்டம் பிழையானது என்றும் இது ஒரு பாரிய அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்லும் என்றும் எடுத்துக் கூறினார்கள். ஆனால் எனக்கு அது அந்த நேரத்தில் விளங்கவில்லை. காலம் அதை இப்போது எல்லோருக்கும் உணர்த்தியிருக்கிறது.

அவர்கள் இந்தியாவில் சென்று பயிற்சி எடுத்த தருணங்களில் இந்தியா எமக்கு நட்பு நாடெல்ல என்றும் இவர்கள் தான் இந்த தமிழினத்துக்கே எதிரியாக இருப்பார்கள் என்றும் அடித்துக் கூறியது மட்டுமல்ல 1971 களில் ஜே.வீ.பியை அழித்தொழிக்க சிறிமா அரசுக்கு எவ்வாறு இந்திய அரசு பக்கபலமாக நின்றதோ

13 ஆம் பக்கம் பார்க்க...

# இதைப் ப...
# சிந்தியுங்க...

தேர்தலும் முடிந்து விட்டது, ஜெனீவா களியாட்டமும் முடிந்து விட்டது, சிங்கள தமிழ் மக்களின் புத்தாண்டு கொண்டாட்டங்களும் முடிந்து விட்டன. உழைத்த அனைத்தையும் செலவழித்து புத்தாண்டு கொண்டாடியாகிவிட்டது. புத்தாண்டு தங்களை தின்றுவிட்டதாக சிலர் கூறுகிறார்கள். நடந்தவற்றை பேச எங்களுக்கு இதுதான் பொருத்தமான நேரம்.

அடுத்தமாதம் மே முதலாம் திகதியோடு தொடங்குகிறது. மே தினம் என்பது அநேகமானோருக்கு இன்னொரு விடுமுறை தினம். அன்றைய தினத்தில் செய்ய வேண்டிய வேலைகள் குறித்து இப்போதே திட்டமிடப்பட்டிருப்பார்கள். சிகப்பு, நீலம், பச்சை, பழுப்பு, மஞ்சல் ஆகிய நிறங்களையுடைய கட்சிகள் கொடிகள் அனைத்தும் செந்நிறமாக மாறிவிடும். பொதுவாகச் சொன்னால் கடைகளில் காட்சிக்கு வைத்திருக்கும் பொம்மைகள்கூட செந்நிறமாகிவிடும். ஓணான்களும் சிகப்பாகிவிடும். உண்மையிலேயே மே தினம் என்பது என்ன? மே தினம் எங்களை சார்ந்ததா?

நாங்கள் வாழும் சமூகத்தில் எல்லாவற்றிற்கும் பணம் வேண்டும். “காசேதான் கடவுளடா” என்று கூறுவது அதனால்தான். ஆனால், சாமானியனுக்கு பணம் தேட வழி இல்லை. ஓரளவாவது வாழ்க்கையை ஓட்ட ஓய்வில்லாது உழைக்க வேண்டும். இல்லையென்றால் ஏதாவது தில்லுமுல்லு செய்ய வேண்டும். இவற்றை செய்தபோதிலும் வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைப்பதில்லை.

அதிகமாக வேலை செய்வது என்றால், சிலர் மேலதிக நேரம் வேலை செய்கிறார்கள் அல்லது மேலதிகமாக இன்னொரு வேலையையும் செய்கிறார்கள். சிலர் சைட் பிசினஸ் செய்கிறார்கள். சில இடங்களில் கணவனும் மனைவியும் சேர்ந்து உழைக்க முயல்கிறார்கள். ஆணி அடிக்கப்படுவோம், கொலை செய்யப்படுவோம், கை கால்களை உடைப்பார்கள் மேலும் பல கொடுமைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதை தெரிந்துக் கொண்டே மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கிறார்கள். சிலர் உயிரை பணயம் வைத்து படகுகள் மூலம் வேறு நாடுகளுக்கு செல்கிறார்கள். சில விவசாயிகள் விவசாயத்திற்கு மேலதிகமாக கட்டடத் துறையில் தொழில் தேடி கொழும்புக்கு வருகிறார்கள். சிறு வியாபாரங்கள் செய்பவர்களுக்கு சாப்பிடக்கூட நேரம் கிடைப்பதில்லை. இன்னொரு வியாபாரம் வருமென எண்ணிக் கொண்டு இரவு வரை காத்திருக்கிறார்கள். இப்படியாக மக்கள் சாப்பாட்டிற்கு ஏதாவது தேடிக்கொள்ள, வீடு வாசலை கட்டிக் கொள்ள, நோய்க்கு மருந்தெடுக்க, பிள்ளைகளுக்கு படிப்பிக்க, காணி நிலம் வாங்க படாதபாடு படுகிறார்கள்.

ஆனால் இவை சமூகத்தில் மட்டுமே உள்ள பிரச்சினைகளல்ல. பிரச்சினைகளால் அடிபட்டிருக்கும் மக்களுக்கு கனவுலகம் என்ற ஒன்றும் இருக்கின்றது. அந்த கனவுலகத்தை தயாரித்தது தாங்கள்தான் என நினைத்திருந்தாலும், அவற்றை உருவாக்குவது முதலாளிகள்தான். உங்கள் வாழ்க்கைக்கு விதவிதமான வாழ்க்கை நிலைகளை காட்டுகிறார்கள். அந்த வாழ்க்கை நிலைக்குள் நுழைவதற்கு பலவிதமான இலக்குகளை தயாரிக்கிறார்கள். அவற்றிற்குள் நுழைவதற்கு வங்கிகளினாலேயே கடன் கொடுக்கிறார்கள். கிரடிட் காட்களை தருகிறார்கள். இலகு தவனையில் பொருட்களும் தருகிறார்கள். தவனையை செலுத்தும்போது மேலும் சிக்கலில் மாட்டிக் கொள்கிறோம். அதிகமதிகமாக வேலை செய்ய வேண்டும். “வாழ்க்கை நிலை” என நினைத்துக் கொண்டிருப்பதை அடைவதற்கு எல்லோரும் முயல்கிறார்கள். இன்னும் சிலர் இருக்கும் நிலையிலிருந்து மேலும் உயரச் செல்ல முயல்கிறார்கள். அப்படி செய்தால்தான் சமூகத்தில் உயர் அந்தஸ்த்தைப் பெறமுடியும். எனவே, நாங்கள் ஒன்றை தெரிந்து கொள்ள வேண்டும், சமூக அந்தஸ்து என்பது மனிதர்களின் உண்மையான கருத்தல்ல. அது ஒருவித மாயை. அது முதலாளிகளால் உருவாக்கப்பட்டது என்பதை நாங்கள் உணர வேண்டும். இதற்குள் சிக்கிக் கொண்டவர்கள் பொறிக்குள் சிக்கிக் கொண்டவர்களைப் போன்றுதான் வாழ்கிறார்கள். அவர்கள் அந்த வாழ்க்கையை விரும்புகிறார்கள். அது துன்பமானதும்கூட. அவர்கள் மேலும் மேலும் சுரண்டப்படுகிறார்கள். மீள முடியாது.





# ற்றியும்
# கள்

கெஸ்ட்ரய்டீஸ், மனச் சிதைவு, உளவியல் நோய் மற்றும் ஏமாற்றமும் தற்கொலையும் மாத்திரமே. வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயினால் ஒவ்வொரு நாளும் மனிதர்கள் இறக்கிறார்கள். குளங்கள் நிறைந்த ராச்சியத்தில் இன்று குடிப்பதற்கு நீர் இல்லை. கடந்த வருடம் சிறுவர் துஸ்பிரயோகம் ஒரு மணிக்கு ஒன்று என்ற வீதத்தில் நடந்துள்ளது. ஒவ்வொரு மனிதனும் கஷ்டத்துடனேயே வாழ்கிறான். ஆனால் அது குறித்து தெரியாததுபோல் இருக்கிறான். தொலைக்காட்சி, ரேடியோ, பத்திரிகைகளால் தலையில் விதவிதமான குப்பைகளை நிறைத்து இந்த உண்மையான பிரச்சினை மூடி மறைக்கப்படுகிறது. இனவாத, மதவாத, தனிநபர்வாத குப்பைகளை

தொழிலாளருக்கு, விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு நாங்கள் சொல்வது இதனை கொஞ்சம் செவிமடுங்கள் என்று.

நாம் வாழ்வது ஒரு சிஸ்டத்திற்குள் அல்லது முறைமைக்குள். இந்த முறைமைக்கு ஏற்ப எங்களிடம் உழைப்பு இருக்கிறது, ஆட்சியாளர்களிடம் பணம் இருக்கிறது. பணம் என்பது இதற்கு முன் எங்களிடமிருந்து சுரண்டப்பட்ட உழைப்பு. பேரம் பேசி உழைப்பை விற்பதுதான் எமது உரிமை. மே தினம் எங்களுக்கு முக்கியமாக இருப்பது இற்றைக்கு நூற்றிருபத்தாறு வருடங்களுக்கு








கனவுலகில் சிக்கவைக்கப்பட்டுள்ள உங்கள் வாழ்க்கையில் ஓய்வு என்பதே கிடையாது. தமது குடும்பத்தோடு இருக்க நேரம் கிடையாது. தொழிலொன்றை செய்தாலும் சிந்தும் உழைப்பு குறித்து திருப்தி கிடையாது. காலையில் வேலைக்கு செல்வது தூக்குமேடைக்கு செல்வதைப் போன்றது. முதலாளிகளுக்காக உழைப்பதைத் தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் அதிவேகப் பாதைகள், அதிவேக தொடர்பாடல் வலையமைப்புகள் மற்றும் குசினிக்கான மின் உபகரணங்களால் நாடே நிரம்பியிருக்கிறது. பொருட்கள் இப்படி மலிவாகும்போது எங்கள் வாழ்க்கை மேலும் மேலும் மோசமாவது ஏன்? சுரண்டலால் அல்லவா?

இந்த வாழ்க்கையில் மனிதர்களுக்கு இறுதியில் எஞ்சுவது இருதய நோய், நீரிழிவு,

நிறப்பிவிட்டால் நாங்கள் ஏற்கனவே கூறியவை மறைக்கப்பட்டுவிடுமல்லவா?

இனி, எங்களுக்கு எதிரிகளாகத் தெரிவது எங்களை சுரண்டுபவர்களல்ல. எங்களைப் போன்றே அந்த தலைவிதிக்கு முகம் கொடுத்துள்ள ஒடுக்கப்பட்டவன். ஒன்று அவன் ஒரு தொழிலாளி, விவசாயி, தொழில் இல்லாதவர், இல்லையாயின் குடும்பத்தில் ஒருவராகவோ உறவினராகவோ இருக்கக் கூடும். அதுவும் இல்லையாயின், சிங்களவராகவோ, தமிழராகவோ, முஸ்லிமாகவோ இருக்கலாம்.

இனவாதத்தால் மக்கள் மோதிக்கொள்ளும்போது ஆட்சியாளர்கள் மெதுவாக தமது வேலையை செய்து கொள்கிறார்கள். யாராவது மோத வந்தால் அவருக்கு துப்பாக்கியை நீட்டுகிறார்கள். துப்பாக்கியை நீட்டுவதற்கு முன்னர் இனவாத, மதவாத, தனிநபர்வாத குப்பைகளால் தலையை நிறைத்து பலவீனப்படுத்துகிறார்கள். போராடுபவர்களுக்கிடையில் ஒற்றுமை இல்லாததால் அநேக போராட்டங்கள் தோல்வியில் முடிகின்றன. கனவுலக மாயையில் சிக்கியிருப்பவர்களுக்கு இந்த போராட்டம் பொருந்தப்போவதில்லை. புதிய கைபேசியினால், லெப்டொப் போன்றவற்றால் மனிதர்களை சமூகத்திலிருந்து பிரிக்க முடியும். சிலருக்கு அரசியல் தேவையேயில்லை. இந்த துண்டுப் பிரசுரத்தை இப்போதே அவர்கள் வீசியிருக்கலாம்.

ஆனால், இந்த பிரச்சினையை புரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு,

முன்னர் தொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள் கிடைக்காமையினால்தான். அவர்கள் கேட்டது 8 மணித்தியால வேளை நாள். இன்றும்கூட அது கிடைக்கவில்லை. என்றாலும், உழைக்கும் மக்களில் பெரும்பாலானோருக்கு அதைப் பற்றிய கவலை கிடையாது.

நாங்கள் ஒன்று சேர வேண்டியது சர்வதேச தொழிலாளர் தினத்தை நினைவு கூருவதற்கு மட்டுமல்ல. எங்களுக்கு என்ன நடந்திருக்கிறது என்பதை அறிந்துக் கொள்ளவாவது வேண்டும். ஆட்சியாளர்கள் எங்களை எங்கே அழைத்துச் செல்கிறார்கள்? உண்மையிலேயே நாங்கள் எங்கே செல்ல வேண்டும் என்பதை அறிய வேண்டும். மே தினத்தில் மாத்திரம் செந்நிறமாகும் ஓணான்களிடமிருந்து அதனை அறிய முடியாது. முன்னிலை சோஷலிஸக் கட்சியின் குரல் பல இடங்களில் உங்களுக்கு கேட்கும். அந்தக் குரலை செவிமடுங்கள். நூற்றுக் கணக்கான உரைகளுக்கு மத்தியில் நாங்கள் சொல்வது சரி எனக் கருதினால் ஒரு அடி முன்னே வைத்து எங்களோடு சேருங்கள்.

பாரிய சக்தியோடு எமது குரல் உங்களுக்கு கேட்காது. ஆகவே, பார்வைக்கு பிரபலமானதாக இல்லை. என்றாலும் நாங்கள் உங்களுக்கு கூறுகிறோம் பிரபலமானவற்றுக்குப் பதிலாக சரியானதை தெரிவு செய்யுங்கள் என்று. உங்களுக்கு வெற்றி, உழைக்கும் மக்களுக்கு வெற்றி, சோஷலிஸத்திற்கு வெற்றி.

# முதலாளித்துவ ’ஜனநாயகமும்’, தேர்தல் முறையும் காலாவதியாகிவிட்டது




தனிவுடமையில் செல்வத்தின் குவிப்பானது, பரந்துபட்ட மக்களிடம் இருந்து செல்வத்தை சூறையாடுவதன் மூலம் நடந்தேறுகின்றது. "ஜனநாயகம்" என்பது தனிவுடமையைக் கொண்டவனின் நலனுக்கானதே ஒழிய, அதை கொண்டிராதவனுக்கானது அல்ல. அரசுகள் என்பது, தனிவுடமையைக் கொண்டவர்களை பாதுகாக்கவும், அதற்கு உதவுவதற்குமானதே. அரசுகளை ஆளுவதற்காக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றவர்கள், இதற்கு சேவை செய்பவர்களே. முன்பு செல்வத்தின் பரம்பல் சார்ந்த வெவ்வேறு வர்க்கங்களை முன்னிறுத்திய தேர்தல் கட்சிகள் காணப்பட்டன. செல்வத்தின் குவிப்பு இடைப்பட்ட வர்க்கங்களை இல்லாதாக்குகின்றதன் மூலம், வேறுபட்ட தேர்தல் சார்ந்த வர்க்க கட்சிகளை இல்லாதாக்குகின்றது. மூலதனம் போல், கட்சிகளின் கொள்கைகள் கூட ஒற்றைத்தன்மை பெற்றுவிட்டன. அதாவது வெவ்வேறு வர்க்கம் சார்ந்து வெளிப்பட்ட முதலாளித்துவ "ஜனநாயகம்" காலாவதியாக விட, அதன்பாலான தேர்தல் முறையும் காலாவதியாகி வருகின்றது.

இப்படி தேர்தல் மூலமான ஆட்சி மாற்றங்கள் மீதான மக்களின் நம்பிக்கைகள் தகர்ந்து வருகின்றன. முன்பு தேர்தல் மூலமான ஆட்சி மாற்றங்கள் மூலம், வெவ்வேறு வர்க்க மற்றும் சமூக நலத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. இன்று பாட்டாளி வர்க்கத்துக்கும் பெரும் மூலதனத்தை அடிப்படையாக கொண்ட சுரண்டும் வர்க்கங்களுக்கு இடையிலான இடைப்பட்ட வர்க்கங்களை இல்லாதாக்கி வருகின்றது. இடைப்பட்ட வர்க்கத்தை சார்ந்த தேர்தல் கட்சிகளையும், அதன்பாலான கொள்கைகள் கொண்டு தேர்தல் மூலம் ஆட்சிக்கு வருவது முடிவுக்கு வந்துவிட்டது.

இது உலகம் தழுவியது. உலக மூலதனத்தின் முதலாளித்துவத்தின் கொள்கை எதுவோ, அதைத்தான் தேர்தல் கட்சிகள் கொண்டு இருக்கின்றன. கட்சிகள் தனிவுடமையை தங்கள் அரசியல் கொள்கையாக கொண்டிருக்கும் வரை, மக்களைச் சார்ந்த கட்சியாக இருக்க முடியாது. மாறாக மூலதனத்தைச் சார்ந்தாகவே இருக்க முடியும்.

அரசு என்பது வர்க்கத்தின் ஆட்சி. இன்று உலக மூலதனத்தின் ஆட்சியாக இருக்கின்றது. அதே நேரம், அரசு என்பது வர்க்க சர்வாதிகாரமாகும். அரசாக இருக்கும் ஆளும் வர்க்கங்களையோ, அதிகார வர்க்கங்களையோ தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மாற்ற முடியாது. இந்த அமைப்பை ஆட்சி செய்கின்றவர்களை மாற்ற முடியும். அவர்களால் அரசின் மூலதனக் கொள்கையை மாற்ற முடியாது. இந்த அமைப்பை வாக்களிப்பு மூலமோ, புதிதாக தெரிவு செய்கின்ற ஆட்சியாளர்களாலோ மாற்ற முடியாது.

தேர்தல் மூலமான மாற்றம் பற்றிய அனுபவங்கள், நம்பிக்கைகள் என்பது, ஆளும் வர்க்க பிரச்சாரங்கள் மூலமாகப் பெற்ற வெற்று நம்பிக்கைகளே. கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சமூக நலத்திட்டங்களை முன்வைத்தான தேர்தல்களும், மாற்றங்களும் முதலாளித்துவத்தைப் பாதுகாக்க அவர்களால் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகளையே கொண்டிருந்தன. ஏன் தேர்தல் கட்சிகள் அதை முன்வைத்தன என்ற தெளிவும், அறிவும் தேர்தல் பற்றிய கற்பனைகளை அகற்ற உதவும்.

**சமூக நலத்திட்டங்களை முதலாளித்துவம் ஏன் கொண்டு வந்தது!**

சமூக நலத்திட்டங்களைக் கோரி மக்கள் வாக்களிக்கின்றனர். மக்கள் சார்ந்த சமூக அடிப்படைகளை பாதுகாக்கக் கோரி ஆட்சியை மாற்றுகின்றனர். மக்கள் மீதான அடக்குமுறைகளை நிறுத்தக் கோரி தேர்தலில் வாக்களிக்கின்றனர்.

சமூகத்தின் பொதுவான எதிர்பார்ப்பு என்பது, சமூகம் சார்ந்தது. இப்படி இருக்க இன்றைய ஆட்சிகளும், ஆட்சி மாற்றங்களும் சமூகம் சார்ந்தவையல்ல. தனிவுடமையையும், அதன் அடிப்படையிலான மூலதனத்தையும் பாதுகாப்பதும், அதற்கான ஆட்சியாகவும் இருக்கின்றது. அனைத்து மக்களுக்குமான அரசு, அதனடிப்படையிலான ஜனநாயகம் என்ற வேஷத்தை, தொடர்ந்து போட முடியாத வண்ணம் மூலதனத்தை குவித்து வருகின்றது. மக்களிடம் பிடுங்கிக் குவிக்கும் மூலதனத்தை அரசு பாதுகாக்கும் வேஷத்தை தொடர்ந்து மூடிமறைக்க முடியாத வண்ணம், அதைப் பாதுகாக்கும் அடக்குமுறைக் கருவியாக மட்டும் தன்னை வெளிப்படுத்தி வருகின்றது. முன்பு அடக்குமுறையை மூடிமறைக்க சமூக நலத்திட்டங்களால் போர்த்தப்பட்ட அரசுகள் இன்று காலாவதியாகிவிட்டன. அரசுகள் இன்று குவியும் மூலதனத்தை அண்டிப் பிழைக்க வைக்கின்ற மாமா வேலையைத்தான், தேர்தல் மூலம் மக்களுக்கு வழிகாட்டுகின்றன. மூலதனக் குவிப்பை தடுத்து நிறுத்துவதை ஜனநாயக விரோதமாகவும், மூலதனத்துக்கு எதிரான பயங்கரவாதமாகவும் அரசுகள் முன்வைக்கின்றன. மூடிமறைக்க எதுவுமற்ற நிலையில், தேர்தல் ஜனநாயகம் நிர்வாணமாகி விட்டது.

1980க்குப் பின்பு சமூக நலத்திட்டங்களை முன்வைத்த தேர்தல்களும், அதன் அடிப்படையிலான ஆட்சி மாற்றங்களும் முடிவுக்கு வந்துவிட்டன. 1980 முந்தைய சர்வதேச நிலைமையும், பொருளாதார அடிப்படையும் இன்று இல்லை என்பதே இதற்கான அரசியல் அடிப்படை.

தேர்தல் "ஜனநாயகத்தின்" அடிப்படையானது, வெவ்வேறு வர்க்கங்கள் சார்ந்த சமூக பொருளாதார வேறுபாடுகளை கொண்டதாக தன்னை நடைமுறையில் காட்டிக் கொள்ளும் வரை தான், அதனால் அரசியல் ரீதியாக உயிர் வாழ முடியும். குறிப்பாக வேறுபட்ட வர்க்கங்களைப் பிரதிநிதித்துவம் செய்து அதை நடைமுறையில் முன்னெடுக்கும் போது தான், தேர்தல் மீதான மக்கள் நம்பிக்கை நீடிக்கும். அதாவது தேர்தல் ஜனநாயகத்தின் நீட்சி என்பது, மாறுபட்ட சமூகப் பொருளாதார நலத்திட்டங்களுடன் தொடர்புபட்டது. சமூக நலத் திட்டங்கள் சார்ந்த அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட கட்சி அரசியல் 1980 களில் முடிவுக்கு வந்ததன் மூலம், கட்சிகள் இடையேயான போலியான பொருளாதாரக் கொள்கை வேறுபாடுகள் கூட இல்லாதாகி விட்டன.

அதாவது 1980களில் முன்னாள் சோசலிச நாடுகளில் ஏற்பட்ட முதலாளித்துவ மீட்சி பூரணமானதைத் தொடர்ந்து, உலகளவில் சமூகநல அரசியல் முடிவுக்கு வந்தது. 1917ம் ஆண்டு சோவியத்தில் நடந்த சோசலிசப் புரட்சி, மக்கள் நலன் சார்ந்த பாட்டாளி வர்க்க அரசாக தோற்றம் பெற்றது. மக்களை முதன்மைப்படுத்திய பொருளாதாரக் கொள்கைகளும், அதனால் ஏற்பட்ட சமூக முன்னேற்றங்களும், சோவியத்யூனியனைத் தாண்டி உலகத் தொழிலாளர்களுக்கு முன்னுதாரணம் மிக்க ஒன்றாக மாறியது.

உலகத் தொழிலாளி வர்க்கமோ அதை முன்னுதாரணமாகவும், அதை தாங்கள் அடைவதை நோக்கிய வர்க்கப் போராட்டமாக மாற்றியது. மேற்கு முதலாளித்துவ தேர்தல் ஜனநாயகம் மீதான நம்பிக்கைகள் தகர்ந்து போனது. முதலாளித்துவம் தனது தேர்தல் ஜனநாயகம் சார்ந்த வர்க்கத்தின் ஆட்சியை தற்காத்துக் கொள்ள, சோவியத் யூனியனின் சமூக நலத்திட்டங்களை முதலாளித்துவம் தனது கொள்கையாக்கி அதை தனது தேர்தல் கொள்கையுமாக்கியது.

இப்படி மேற்கு முதலாளித்துவத்தால் முன்னெடுக்கப்பட்ட சமூக நலத்திட்டங்கள், தொழிலாளர் வர்க்கம் போராடுவதை தடுக்க சோவியத்தில் இருந்து எடுக்கப்பட்டவை தான். இந்தச் சமூக நலத்திட்டங்கள் அடிப்படையில் கட்சிகளின் கொள்கை வேறுபாடாகவும், ஆட்சி மாற்றத்துக்கான ஒரு திட்டமாகவும் அமுலுக்கு வந்தன. வலது இடது என்ற கட்சி வேறுபாடுகளை உருவாக்கியது. தேர்தல் முறை மீதான மக்களின் நம்பிக்கையை இது மீள உருவாக்கியது. மக்களை சமூக நலத்திட்டங்கள் மூலம் தொடர்ந்து ஏமாற்றுகின்ற, தேர்தல் முறை மீதான நம்பிக்கையை, சுரண்டும் வர்க்கங்களால் மீண்டும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடிந்தது.

இந்த சமூக நலத்திட்டங்கள் முதலாளித்துவத்தின் "ஜனநாயகக்" கூறுமல்ல, மனிதாபிமான சமூகப் பண்புமல்ல. மக்கள் தமக்கு எதிராக போராடாமல் தடுக்க, சோவியத்தில் இருந்து பிரதி பண்ணப்பட்டவை தான் சமூகநலத்திட்டங்கள். சோசலிச நாடுகளின் முதலாளித்துவ மீட்சி, 1980 களில் முடிவுக்கு வந்ததன் மூலம், சமூக நலக் கொள்கைகளுக்கு முடிவு கட்டியது முதலாளித்துவம்.

**முதலாளித்துவம்**

இதன் அர்த்தம் முன்னாள் சோசலிச நாடுகளில் மட்டுமல்ல, மேற்கு முதல் மூன்றாம் உலக நாடுகள் வரையான அனைத்து சமூக நலத்திட்டங்களும் முடிவுக்கு வந்தன. தனிவுடமையிலான வர்க்க சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளும் தேர்தல் கட்சிகள், மக்கள் நலன் சார்ந்த கொள்கையைக் கொண்ட கட்சியாக காட்டிக் கொள்ளும் தன்மையை சர்வதேச ரீதியாக இழந்து போனது. 1980 களில் முதலாளித்துவ மீட்சி, உலகளவிலான சமூக நல கட்சிகளையும், அரசுகளையும் முடிவுக்கு கொண்டு வந்தது. இது சர்வதேச ரீதியான மாற்றமே ஒழிய, தனிப்பட்ட கட்சிகளின் கொள்கை மாற்றங்களல்ல.

தனிவுடமையை ஆதரிக்கின்ற கட்சிகளின் கொள்கைகள் என்பது, குவியும் உலக மூலதனத்தின் கொள்கைகளையே கொண்டிருக்க முடியும். மூலதனத்தைப் பாதுகாக்கின்றதும், அதனை மேலும் விரிவாக்குகின்ற கொள்கை மூலம் தான், மூலதனத்தின் ஆசியுடன் ஆட்சி ஏறமுடியும். கட்சிகள் தமக்கு இடையில் மூலதனத்தை பாதுகாக்கும் கொள்கை வேறுபாடுகள் குறைத்து வருவதன் மூலம், ஒற்றைத் தன்மையை பெற்று வருகின்றன. சமூக நலத் திட்டங்கள் சர்வதேச ரீதியாக காலாவதியான பின், வெளிப்படையான மக்கள் விரோத தன்மையை வெளிப்படுத்தியபடி, ஆட்சிக்கு வருகின்றன.

அத்துடன் தனிவுடமையிலான மூலதனத்தை பாதுகாக்கும் தேர்தல் கட்சிகள், முந்தைய சமூக நலத்திட்டத்தை இல்லாதாக்கும் அடிப்படையிலான பொருளாதாரக் கொள்கையுடன் தான் ஆட்சியேற முடியும். உலகளாவிய பெரு மூலதனத்தின் நலனே, கட்சிகளின் பொருளாதாரக் கொள்கையாக ஆட்சியாளர்களின் நடைமுறையாக இருக்க முடியும்.

15 ஆம் பக்கம் பார்க்க...

# ஏப்ரல் போராட்டம் பரந்துபட்ட மக்களின் நல்வாழ்வுக்காகவே

## தோழர் குமார் குணரத்தினம்



ஐரோப்பாவில் நடந்த ஏப்ரல் வீரர்கள் தின நினைவு கூரல் நிகழ்ச்சிகளின்போது முன்னிலை சோஷலிஸக் கட்சியின் செயல் வீரர்கள் ஆற்றிய உரைகளின் சாராம்சம்

1971 களில் ஜே.வி.பி யின் இன் கிளர்ச்சியானது சமூகநலன் சார்ந்த அடிப்படையில் தொடங்கப்பட்டது. இந்த ஆதிக்க அரசுகளால் ஒடுக்கப்பட்டு தமது முதுகைக் கூனி நடக்கும் மக்களை நிமிர்ந்து நடக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் நடத்தப்பட்ட ஒரு போராட்டமாக இருந்தது. அப்போராட்டம் இந்திய, சீன அரசுகளின் உதவியுடன் ஒடுக்கப்பட்டது. உயிர் நீத்த தோழர்களை நினைவுகூரும் 43வது வருட நிகழ்வுகள் இலண்டன், இத்தாலி, பிரான்சில் நடைபெற்றது. இலண்டனில் நடைபெற்ற நிகழ்வில் ஸ்கைப்பின் ஊடாக தோழர் குமாரும், இத்தாலி, பிரான்சில் தோழர் பூபுது ஜா்கொடவும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

**இலண்டனில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் குமாரினது உரையின் சாராம்சம்:!**

"71 ஏப்பிரல் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களின் வீரப்பிரதாபங்களை ஞாபகப்படுத்துவது மட்டுமே இந்த நினைவுகூரும் நிகழ்வுகளின் மையமான விடயமாக இருக்கக் கூடாது. கிளர்ச்சி வீரர்களின் வீரபிரதாபங்கள் பேசப்படல் வேண்டும். அத்துடன் ஏன் இந்த வீரர்களின் போராட்டம் தோற்றுப்போனது, அதற்கான காரணங்கள் என்ன, இனி எவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்து செல்வது என்பன பற்றி சிந்திப்பதும், பேசுவதும் தான் இந்த நிகழ்வுகளின் வெற்றியாக இருக்க முடியும்.

71 ஏப்பிரல் கிளர்ச்சியானது பரந்துபட்ட மக்களின் நல்வாழ்வுக்காக முதலாளித்துவ அரசுக்கெதிரான போராட்டமாக இருந்த போதும், மக்களை அணிதிரட்டாது அவர்களிடமிருந்து அந்நியப்பட்ட இளைஞர்களால், சேகுவேரா பாணியில் நடைபெற்ற கிளர்ச்சியாகும். இது அன்றைய ஆட்சியாளர்களினால் இலகுவாக நசுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மீண்டும் 87-89 களில், 71 கிளர்ச்சியின் தோல்வி குறித்த எத்தகைய விமர்சனமும் இன்றி மறுபடியும் பழைய சேகுவேரா பாணியில், மக்களை அணிதிரட்டாமல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு பாரிய தோல்வியினை அடைந்தது.

எனவே இந்த நாளில் நாம், இந்த கிளர்ச்சிகளின் தோல்விக்கான பிரதான காரணமான போராட்ட சித்தாந்தம் குறித்து சிந்திக்க வேண்டும். பரந்துபட்ட மக்களைப் போராட்டத்தில் இணைக்க் கூடிய மார்க்சிச-லெனினிய முன்னணி வீரர்களாக உருவாக்குவது குறித்து பேச வேண்டும். மக்கள் மீது ஆளும் முதலாளித்துவ அரசுகள் சுமத்துகின்ற அடக்குமுறை, ஒடுக்குமுறை, பொருளாதார சுமைகளிற்கு எதிராக மக்களுக்கு போராடக் கற்றுக்கொடுப்பது பற்றி நாம் பேச வேண்டும். மக்களுடன் இணைந்து மக்கள் போராட்டத்தினை முன்னெடுப்பது குறித்துப் பேச வேண்டும். இதுதான் 71 ஏப்பிரல் கிளர்ச்சி வீரர்களின் தியாகங்களிற்கு நாம் செய்யக் கூடிய மரியாதையாக இருக்கும்"

**பாரிஸ் கூட்டத்தில் முன்னிலை சோஸலிசக் கட்சியின் பிரசாரச் செயலாளர் - தோழர் புபுது ஜாகொடயினது உரையின் சாராம்சம்:!**

கடந்த அரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட இனவாத அரசியலால், நாடு இனவாத சகதிக்குள் மூழ்கியுள்ளது. இதனால் எம்நாட்டின் இனப்பிரச்சினை தீர்வில்லா பிரச்சினையாகவே தொடர்கின்றது. இந்நிலையில் எம்மீதான அரசின் அடக்குமுறைகளுக்கு மத்தியிலும், நாம் தமிழ்மக்கள் பிரச்சினைகளை, சிங்கள மக்கள் மத்தியில் நேர்மையாக எடுத்துச் சொல்லி வருகின்றோம். இலங்கை அரசு இன்று தமிழ்-முஸ்லிம் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இன அடக்குமுறைகள், திட்டமிட்ட முறையில் அம்மக்களின் பிரதேசங்கள் மீது செய்துவரும் இனவொழிப்பு நடவடிக்கைகளை ஏன் தான் செய்கின்றது என்பதையும் விளக்கி வருகின்றோம்.

அரசு தன் குடும்ப அரசியலைத் தொடரவும், நம்நாட்டிற்குள் வந்தவண்ணமுள்ள நவதாராளவாதிகளைக் காப்பாற்றவுமே இனங்களுக்கிடையில் ஐக்கியத்தைச் சீர்குலைத்து குரோதங்களை வளர்த்து வருகின்றது. இவ்வுண்மையை நாம் சமவுரிமை இயக்க அமைப்பின் மூலம் நாடு முழுவதும் விரிந்த பிரச்சார இயக்க நடவடிக்கையாக ஆக்கியுள்ளோம். இந்நடவடிக்கைகளுக்கு ஊடாகவே தமிழ் மக்கள் பிரச்சினைக்காக சிங்கள மக்களை சிந்தித்து செயற்படவும், அவர்களின் நியாயமான உரிமைகளுக்காக போராட வைக்கவும் முடியும். இப்படியானதொரு அணிவகுப்பின் மூலமே தமிழ் மக்களையும் அதன் பங்குதாரர்கள் ஆக்கவும் முடியும். சகல இனவாதங்களையும் கடந்த நிலைகொண்டு தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் இவ்வேலைகளை முன்னெடுக்கும் இவ்வேளையில், எம்மையும் இவ்வரசு புலிகள் என்கின்றது.

இன்று எம்நாட்டின் அரசியல் நிலைமையின் பாற்பட்டு 43-வருடங்களுக்கு முன் நடைபெற்ற ஏப்ரல் வீரர் போராட்டத்தின் சாதக-பாதகங்களைக் கணக்கில் எடுத்தும் எம் அரசியல் அமைப்பை நகர்த்த வேண்டிய சூழ்நிலையிலும் உள்ளோம். இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில், 53-ம் ஆண்டு கர்த்தால் அன்றிருந்த அரசையே ஆட்டங் காண வைத்ததுமல்லாமல், அரசின் செயற்பாட்டை முடக்கியதின் விளைவால், கடலில் நங்கூரம் இடப்பட்ட கப்பலிலேயே மந்திரிசபைக் கூட்டத்தை நடாத்தும் நிலையையும் ஏற்படுத்தியது. இப்பார்ப்பட்டதொரு வல்லமை மிக்க சக்தியாக விளங்கிய இடதுசாரி இயக்கம், அதையடுத்த காலகட்டப் பகுதிகளில், பாராளுமன்ற சகதிக்குள் மூழ்கியதோடு மட்டுமல்லாமல், பேரினவாதிகளின் எடுப்பார் கைப்பிள்ளைகளுமாயினர். இவர்களின் இவ்வரலாறு இப்படியாகவே இன்று வரை நீடிக்கின்றது.

இப்பேர்ப்பட்ட 17-ஆண்டுகால இடதுசாரி இயக்க வீழ்ச்சியின் பின்னானதொரு, எழுச்சியாகவே ஏப்ரல் போராட்டம் ஏற்படுகின்றது. ஏப்ரல் வீரர்களின் போராட்டம் பாட்டாளி வர்க்கப் புரட்சியல்ல, இளைஞர் சக்தியின் வீறுகொண்டதொரு புரட்சிகரப் போராட்ட நடவடிக்கையாகும். பிசகற்ற தத்துவத்தின் பாற்பட்டு, மக்களின் அடித்தளம் கொண்டதொரு புரட்சியாக முன்னெடுக்கப் பட்டிருக்குமேயானால், அப்புரட்சி சந்தித்த பாரிய அழிவுகளையும், இழப்புகளையும் இல்லாதாக்கியிருக்க முடியும். இருந்தும் அன்றைய வரலாற்றுச் சமூகச் சூழலில் அதற்கிருந்த வரலாற்றுப் பாத்திரத்தை குறைத்து மதிப்பிட முடியாது. நாட்டில் சமதர்ம ஆட்சியொன்றை உருவாக்கும் பொருட்டின் பாற்பட்டு, அதில் தம்மை இணைத்த ஏப்ரல் வீரர்களையும் அவர்தம் தியாகங்களையும் மதித்து, அவர்களுக்கு நாம் சிரம் தாழ்த்தியாக வேண்டும்.

மேற்கூறிய பட்டறிவுக்கூடான அனுபவங்களைப் பாடமாகப் பெற்றே, நாட்டில் எம் அரசியல் வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம். அன்றைய 71-ஏப்ரல் நிகழ்வுகளுக்கு இருந்த சூழல் இன்று எமது எம்நாட்டில் இல்லை. ஆனால் அடக்குமுறை வடிவங்கள் அப்படியே தான் உள்ளன. இன்றைய மகிந்த அரசானது தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல, நாட்டின் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கும் எதிரான அரசுமாகும்.

சிங்கள மக்கள் தம் அத்தியாவசிய வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடும் போது, அரசு இராணுவத்தை ஏவி சுட்டுத்தள்ளுகின்றது. அரச காடைத்தனத்தின் உச்சக்கட்டத்தை எரிபொருள் விலையேற்றத்திற்காகவும், சுத்தமான குடிநீருக்காகப் போராடிய மக்களுக்கு கிடைத்ததை கண்கூடாகக் கண்டோம். அத்தோடு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுக்கு இல்லாதாக்கப்படும் கல்வி வசதியுடன் கூடிய ஏனையவற்றிற்காக போராடும் தொடர் நிகழ்வுகள் நாளாந்த செய்திகள் ஆகின்றன. எனவே ஒடுக்கப்படும் சிங்கள மக்களும், அடக்குமுறைகளுக்கு உள்ளாகும் ஏனைய இன மக்களின் போராட்டங்களுடன் இணையும் போதே இவ் அரசையும் அதன் பயங்கரவாதத்தையும் முறியடிக்க முடியும்.

# இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்?





எதனைச் செய்யக் கூடாது என்ற அரசியல் தெளிவு தான், எதைச் செய்ய வேண்டும் என்பதை கற்றுத் தரும். இனவொடுக்குமுறையை எதிர்கொள்ளும் மக்களை, இனரீதியாக அணிதிரட்டுவது தான் இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபட முடியாமைக்கான அடிப்படைக் காரணம். இப்படி இனரீதியாக மக்களை அணிதிரட்டுகின்றவர்கள், பொருளாதாரத்தில் இருந்து அரசியலை பிரித்து விடுகின்றனர். அதாவது மக்களின் நிஜ வாழ்க்கையில் இருந்தும், அரசியலை வேறுபடுத்தி விடுகின்றனர். இதன் மூலம் தங்களின் சொந்த பொருளாதார நலனுக்கு ஏற்ற, இன மந்தைகளாக மக்களை மாற்றி மேய்கின்றனர். இதனால் தான் இன ஒடுக்குமுறையில் இருந்து மக்கள் விடுபட முடியாது போகின்றது. இனரீதியாக அணிதிரளாது இனவொடுக்குமுறையை எப்படி எதிர்கொள்வது என்பது, இதுவரை பரீட்சித்துப் பார்க்காத மாற்றுப் பாதையாக இருக்கின்றது. இன ஒடுக்குமுறைக்கு எதிராக, இன ரீதியாக அணிதிரளாத அரசியல் பாதையை கண்டடைவது அவசரமானது அவசியமானது.

இனரீதியாக அணிதிரள்வதின் விளைவு எதிர்மறையானது. இது மக்குளை தொடர்ந்து இனரீதியாக ஒடுக்க உதவுகின்றது. அதேநேரம் தொடர்ந்து மக்களை ஏமாற்ற பயன்படுத்துகின்றனர். இந்த இனவாத சகதியில் இருந்து மக்கள் மீள முடியாத வண்ணமும், எந்த நம்பிக்கையுமற்ற நிலையையும் உருவாக்கி, அரசியல் ரீதியாக அனாதையாக்கப்படுகின்றனர். கடந்தகாலத்தில் மக்களின் பெயரில் நடத்திய இனப் போராட்டங்கள் மூலம், இனத்தைப் பாதுகாக்க முடிந்ததா எனின் இல்லை. சொந்த மண்ணில் இருந்து அரைவாசி மக்களை நாட்டின் உள் மற்றும் வெளிப் புலப் பெயர்வுகள் மூலம் வெளியேற்றி உள்ளது. இனத்தின் சுய இருப்புக் கூட, இன ரீதியான குறுகிய தவறான போராட்டங்களால் கேள்விக்குள்ளாகி, அழிவுக்கு உள்ளாகி வருகின்றது.

தொடர்ந்தும் இன ரீதியான அரசின் இராணுவ ஒடுக்குமுறையும், அதற்கு எதிரான இனரீதியான அணிதிரள்வும், கடந்த கசப்பான காலம் போல் மக்களை சொந்த மண்ணில் இருந்து அகற்றி விடுகின்ற அரசியலாக முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது இனரீதியான ஒடுக்குமுறையும் சரி, இன ரீதியான அணிதிரள்வும் சரி, இன ரீதியான அழிவுக்கே இட்டுச் செல்லும். இதுதான் கடந்தகால அனுபவம் கூட.

இன ரீதியான போராட்டங்கள் தோற்றுப் போகும். இன ரீதியாக அணிதிரள்வது, சொந்த இனத்தை அழிப்பதில் முடிவுறும். ஒடுக்குமுறையில் ஈடுபடுவன் கூட, தன்னை இன ரீதியாக முன்னிறுத்திக் கொண்டு தான் ஒடுக்குகின்றான். இந்த எதிர்முனையிலான இரு இனவாத அரசியலையும் எதிர்கொள்வதன் மூலம், இனவொடுக்குமுறைக்கு தீர்வு காண முடியும்.

இதுதான் நடைமுறை சார்ந்த எதார்த்தம். இனவாதத்துக்குள் நின்று கொண்டு, இன ஒடுக்குமுறைக்கு தீர்வு காண முடியாது என்பதே எதார்த்தம்.

இனவாதத்துக்கு வெளியில் தீர்வு காண்பது எப்படி என்ற கேள்வியை எழுப்பும் போது, இதை சாத்தியமற்றதாக கூறுகின்ற எதிர்நிலை தர்க்கத்தை இனவாதத்தில் நின்று தான் முன்வைக்கின்றனர். இன ரீதியான ஒடுக்குமுறையை, 60 வருடத்துக்கு மேலாகவே இன ரீதியான எதிர் அரசியல் மூலம் தீர்வு காண முடிந்ததா? இந்தக் கேள்வியை எழுப்புவதை, இனவாதிகள் எதிர்க்கின்றனர். இன ரீதியான குறுகிய இனவரசியல் மூலமான தங்கள் சொந்த நலன்கள் பாதிக்கப்பட்டுவிடும் என்று இனவாதிகள் அஞ்சுகின்றனர்.

தொடர்ந்து என்ன நடக்கின்றது. இனவாத நோக்கில் மீண்டும் புலி வேட்டை தொடங்கி ஐ.நாவில் புதிய தீர்மானம் வரை அரங்கேறுகின்றன. இதனை இனவாதிகள் ஆதரிக்கின்றனர் அல்லது எதிர்க்கின்றனர் அல்லது முன்னெடுக்கின்றனர். தங்களின் இந்தச் செயல்கள் அனைத்தையும் மக்களின் நலனுக்கானதாக காட்டுகின்றனர். இப்படி காலத்துக்கு காலம் முன்வைக்கின்ற இனவாத செயற்பாடுகள் மூலம், தீர்வைக் காண முடிந்ததா? இல்லை. இனியாவது இதன் மூலம் தீர்வைக் காண முடியுமா? இல்லை. இப்படி இதைத் தெரிந்து கொண்டு, அதையே ஆதரிக்கின்றனர். இனவாத அரசியலும் சிந்தனையும் எம்மை நாமே தோற்கடிக்கின்ற உண்மையாகும். தீர்வைக் காண முடியாதென்றால், ஏன் இனவாதச் செயற்பாட்டை ஆதரிக்க வேண்டும்?

இப்படி இன ரீதியாக சிந்திப்பவர்கள் ஏமாளிகளாகவும், எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும் இருக்கின்றனர் என்பதே, அரசியல் ரீதியான உண்மை. இப்படி இருக்க இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதற்கு எதிராக இன ரீதியாக அணிதிரள்வதும், தியாகங்கள் செய்வதும் கூட, அர்த்தமற்ற வகையில் தொடர்ந்து நடந்தேறுகின்றன.

இந்த இனவாத அரசியல் பின்புலத்தில் பயங்கரவாத ஒழிப்பு பற்றியும், மனிதவுரிமை பற்றியும், வாய் கிழிய ஓலமிடுகின்றனர்.

இந்தியா - இலங்கை தேர்தல் கட்சிகள் கூட, தங்கள் வாக்கு அரசியலுக்கு அமைவாக இனரீதியாக மக்களை பிரித்து வைத்து வாக்கு வேட்டையில் ஈடுபடுகின்றன. தமிழ் மக்கள் தொடர்ந்து இனரீதியாக ஒடுக்கப்படுவதையும், அதைக் கொண்டு பிழைப்பதையும் தங்கள் அரசியலாக முன்னெடுக்கின்றனர். இனரீதியாக இலங்கை மக்களில் இருந்து தமிழ் மக்களை பிரித்து ஒடுக்குவது போல், தமிழ்மக்களின் உரிமைகள் பற்றியும் இலங்கை மக்களில் இருந்து பிரித்துப் பேசுகின்றனர். இனரீதியாக ஒடுக்குதல் மூலமும், இன ரீதியான உரிமையை கோருதல் மூலமும், இன ரீதியாக மக்களை பிரித்து ஒடுக்கி பிழைக்கின்ற பிழைப்புவாத வாக்கு வேட்டை அரசியலே இனவாதம் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கை மக்கள் தமக்குள் ஒன்றிணைந்து தங்கள் மீதான ஒடுக்குமுறையை மட்டுமல்ல, தங்கள் உரிமைகளையும் வென்று எடுக்கப் போராடுவதை மறுக்கின்ற மக்கள் விரோத அரசியலே இனவாத அரசியலாகும். இனவாதம் மூலம் வாக்கு வேட்டைக்கான பிழைப்புவாதம் முதல் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான சந்தை முரண்பாடுகள் சார்ந்து மனிதவுரிமை மீறல்கள் வரை பேசுகின்ற ஏகாதிபத்தியம் வரை, மக்கள் தங்களுக்காக தாங்கள் போராடுவதை மறுக்கின்றன.

இலங்கையின் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து தீர்வு காண்பதற்காக அணிதிரள்வதை மறுக்கின்ற இனவாத அரசியலைத் தான், இலங்கை முதல் அமெரிக்கா வரை முன் வைக்கின்றன. இதனையே புலிகள் முதல் கூட்டமைப்பு வரை முன்வைக்கின்றன. இவர்களுக்குள் எந்த வித்தியாசமும் கிடையாது.

உலக மூலதன நலன் சார்ந்து ஏகாதிபத்தியம் முன்வைக்கும் "மனிதவுரிமைக்கு" எதிராக, அரசு இலங்கையில் "தீர்வு" காண்பது பற்றி பேசுகின்றது. ஆனால் இனவாதிகள் முதல் ஏகாதிபத்தியம் வரை, மக்கள் தமக்குள் தீர்வு காண்பது பற்றி பேசுவது கிடையாது. இலங்கை மக்கள் அணிதிரண்டு தீர்வு காண்பதை மறுப்பதே, இவர்களின் அடிப்படையாகும்.

இந்த வகையில் மக்கள் தமக்காக தாம் போராட முடியாது என்பதே மனிதவுரிமை பேசும் அமெரிக்காவின் கொள்கை மட்டுமல்ல, இனரீதியாக தமிழ்மக்களை அணி திரட்டும் தமிழினவாத அரசியல்வாதிகளின் கொள்கையும் கூட. மக்கள் தமக்காக தாம் போராடுவதை மறுக்கின்ற அரசியலே காலாகாலமாக முன்தள்ளப்படுகின்றது.

மக்கள் தங்கள் மேலான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது என்பது, அவர்கள் தமக்காக தாம் போராடுவதுதான். அதற்கு மாறாக ஆயுதக் குழுக்களோ, அரசியல் கட்சிகளோ, நாடுகள் தலையிடுவதோ, மக்கள் போராட்டமல்ல. இது மக்களுக்கு எதிரானதும், தீர்வுகளைத் தராததுமான மக்கள் விரோத அரசியல் செயற்பாடாகும்.

இதைத்தான் மக்கள் இனவொடுக்குமுறைக்கு எதிரான அரசியலாக கருதி ஆதரித்து வருகின்றனர். இதனால் தான் சிறுபான்மை இனங்கள் சிதறி அழிந்து வருகின்றன. ஒரு இனம் தன் இனத்தின் சிதைவையும், இன அழிவையும் தடுக்க வேண்டும் என்றால், எந்த இனத்தினை பாதுகாப்பதாக கூறப்பட்டு ஒடுக்கப்படுகின்றோமோ, அந்த இன

**15 ஆம் பக்கம் பார்க்க...**

**இலங்கை மக்கள் அணிதிரண்டு தீர்வு காண்பதை மறுப்பதே, இவர்களின் அடிப்படையாகும்.**

**இந்த வகையில் மக்கள் தமக்காக தாம் போராட முடியாது என்பதே மனிதவுரிமை பேசும் அமெரிக்காவின் கொள்கை மட்டுமல்ல, இனரீதியாக தமிழ்மக்களை அணி திரட்டும் தமிழினவாத அரசியல்வாதிகளின் கொள்கையும் கூட. மக்கள் தமக்காக தாம் போராடுவதை மறுக்கின்ற அரசியலே காலாகாலமாக முன்தள்ளப்படுகின்றது.**

**மக்கள் தங்கள் மேலான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது என்பது, அவர்கள் தமக்காக தாம் போராடுவதுதான். அதற்கு மாறாக ஆயுதக் குழுக்களோ, அரசியல் கட்சிகளோ, நாடுகள் தலையிடுவதோ, மக்கள் போராட்டமல்ல.**

# தோழர் தவராசா மரணம் உழைக்கும் மக்களின் இழப்பாகும்!

தனக்காக மட்டும் வாழாது, பிறருக்காக வாழ்தலே உழைக்கும் வர்க்க உணர்வு பெற்ற மனிதர்களின் உயரிய பண்பு. தங்கள் வாழ்க்கையில் இருந்தும், தம்மைச் சுற்றிய மனிதர்களின் வாழ்க்கை சார்ந்தும், சமூக உணர்வு பெற்றவர்கள், சோசலிச சமுதாயத்தை படைக்கப் போராடுவதன் மூலம் மகிழ்ச்சியான சோசலிச வாழ்க்கையை உருவாக்க முனைகின்றனர்.

சுரண்டலும், சாதியமும், இனவாதமும், ஆணாதிக்கமும் கொண்ட இன்றைய வாழ்க்கை முறை ஏற்படுத்தும் மனித அவலங்களையும் துயரங்களையும் இல்லாதொழிக்க, உழைக்கும் வர்க்க உணர்வு பெற்ற போராட்டமே மிகச் சிறந்த மனிதர்களை மட்டுமல்ல முன்னுதாரணமிக்க வாழ்க்கையையும் உருவாக்கின்றது.

1960 களில் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடி உழைக்கும்வர்க்க உணர்வு பெற்ற உன்னதமான மனிதர்கள், தங்கள் மரணம் வரை அதற்காகவே வாழ்கின்றனர். தமிழ் தேசிய- பாசிச அலையை, எதிர் நீச்சல் போட்டுப் போராடியவர்கள் இன்றும் நமது சமூகத்தில் இருக்கின்றனர். அவர்கள் இன்று அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான வர்க்க அரசியலுடன் தம்மை இணைத்துக் கொள்வதில் முன்னோடிகளாக முன்னுதாரணம் மிக்கவர்களாக இருக்கின்றனர்.

தோழர் தவராசா அவர்கள், 1960 களில் சண்முகதாசனின் தலைமையிலான புரட்சிகரமான அரசியல் பாரம்பரியத்தில் புடம் போடப்பட்டவர்களில் ஒருவர். அதனாலேயே தங்கள் வாழ்வியற் சூழலே பாசிசமாகிய போதும், விட்டுக்கொடுக்காத மனிதராக அதற்கு எதிராகப் போராட நடைமுறையில் வர்க்க விடுதலைப் போராளியாகச் செயற்பட அவரால் முடிந்திருக்கின்றது.

இந்த வகையில் தான் பொலிகண்டியைச் சேர்ந்த தோழர் தவராசா அரச பாசிசத்தின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், அவருக்குக் கிடைக்கப் பெற்ற "போராட்டம்" பத்திரிகைகளை தான் சீவித்த பிரதேசத்தின் அயல் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று விநியோகித்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரசியல் பிரச்சாரத்தை விரிவாக்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். அவர் உழைக்கும் வர்க்க உணர்வுடன் "போராட்டம்" பத்திரிகையையும், அதன் அரசியலையும் உழைக்கும் மக்கள் மத்தியிற் கொண்டு சென்றார். தனது 70 வது வயதிலும் கடலுக்குச்சென்று உழைத்து வாழ்ந்த பெருமையையும் சுமந்தபடி, சமூதாய மாற்றமே அனைத்துக்குமான தீர்வாக கருதிச் செயற்பட்டவர் தோழர் தவராசா.

வர்க்க உணர்வு பெற்ற தமிழ்-சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை, 1960 களில் போராட்ட அரசியல் பாரம்பரியத்துடன் நினைவு கூர்ந்து, அவ்வரசியலைத் தொடர்வதற்காக -இன்று நடக்கும் உழைக்கும் மக்களின் போராட்டத்தில் தன்னை பங்காளியாக்கிக் கொண்டார். இந்த வகையில் தமது முதுமையிலும் தனது வர்க்க உணர்வுடன் தன்னை வெளிப்படுத்திய முன்னோடி நமது தோழர் தவராசா அவர்கள்.



தோழர் தவராசா அவர்களைப் போல வர்க்க விடுதலையை முன்னிறுத்தி - சமூக விடுதலைக்காக போராடியவர்கள்,பின்னாளில் பாசிச ஒடுக்குமுறைகளுக்கு அடங்கிப்போக மறுத்தவர்கள் எனப் பல தோழர்கள் இன்றும் உழைக்கும் மக்களின் விடுதலைக்கான அரசியலை உறுதியாகத் தம் கரம் பற்றியபடி போராடுகின்றனர். இவர்களின் போராட்ட வரலாறும், தியாகமும் சிறுகச் சிறுக வளர்ந்துவரும் இன்றைய மக்கள் போராட்டச் சக்திகளுக்கு முன்னுதாரணமும், ஊக்கமூட்டுவதாகவும் இருந்து வருகிறது.

இதனடிப்படையிலேயே மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட மரணித்த தோழர்களின் வரலாற்றையும் மீட்டெடுத்து அவர்களையும் நினைவு கூரவேண்டியவர்களாக- அவர்களின் பாரம்பரியத்தைத் தொடர வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதையும் இந்த வேளையில் கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இனவாதம் மூலம் இனமுரண்பாட்டை தீர்க்க முடியாது. மாறாக தமிழ்-சிங்கள ஒடுக்கப்பட்ட மக்கள் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் மூலம் மட்டுமே, இனவொடுக்கு முறையை முறியடிக்க முடியும் என்ற அடிப்படையில்- உழைக்கும் வர்க்க அரசியலை உயர்த்திப் பிடித்தவர் நமது தோழர் தவராசா அவர்கள். தமிழ் குறுந்தேசிய இனவாதத்தை எதிர்த்து, ஒடுக்கப்பட்ட அனைத்து மக்களின் ஐக்கியத்தையும் முன்னிறுத்தி- எம்முடன் இணைந்த புரட்சிகர பயணத்தின் போதான அவரின் மரணம், மக்கள் போராட்டத்தை மறுசீரமைத்து முன்னெடுக்கும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்துக்குப் பாரிய இழப்பாகும்.

தோழர் தவராசா அவர்கள் போன்று பாசிசத்தின் கெடுபிடிகளுக்குள் இலைமறை காயாக வாழ்ந்து, வர்க்க அரசியலை உயர்த்தி மரணித்த அனைத்து தோழர்களின் நினைவுகளும் அவர்களின் வாழ்க்கையும் போற்றுதலுக்குரியது. அவர்களின் வர்க்கப் போராட்டப் பாரம்பரியத்தை மீட்டெடுப்பது மட்டுமல்ல, அவர்களின் வர்க்க கனவுகளையும் நிறைவு செய்வதே அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

புதிய ஜனநாயக மக்கள் முன்னணி

## மகிந்தாவின் புலி வேட்டையும் விளக்குப்பிடிக்கும்...

உள்ளது.

இதே போன்று தமிழ் தேசியத்தைப் பயன்படுத்தி தேர்தல் அரசியல் செய்வோரும் எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. இவர்களாலும் மறைமுகமாகவும், இவர்களின் ஊடக செல்வாக்கு மூலமும் இலங்கை அரசின் கைதுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களில் சிலர் கைதுகளை எதிர்த்து அறிக்கை விட்டாலும், கைதுகளும், பதற்ற நிலையும் தமது அரசியல் போக்குக்கு உதவும் என்றே நம்புகின்றனர். அதாவது, இந்நிலை தொடர்ந்தால் எஜமான் இந்தியாவோ அல்லது அமெரிக்காவே உதவிக்கு வரும் என்பதே இவர்களின் கணக்காகும். அதேவேளை, யாழப்பாணத்தில் உள்ள இவர்களின் பிரச்சார ஊடகமான உதயன் பத்திரிகையும், இலங்கை அரசுக்கு உதவும் முகமாக, கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய அரசு சொல்லும் தகவல்களை உறுதிப்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ளது என சமூக ஆர்வலர்களும் மக்கள் சார் போராட்ட சக்திகளும் விசனப்படுகின்றனர்.

மேலே கூறப்பட்ட விடையங்கள் அனைத்துக்கும் சிகரம் வைத்தாற் போல 11.04.2014 அன்று புலிவேட்டை-2014 திரைப்படத்தின் தற்காலிக உச்சக்கட்டக்காட்சி வவுனியா- நெடுங்கேணிப் பிரதேசத்தில் அரங்கேறியது. வவுனியா நெடுங்கேணி பகுதியில் இராணுவத்தினரது துப்பாக்கிச் சூட்டுப்பிரயோகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புதிய தலைவர் என கூறப்பட்ட கோபி உள்ளிட்ட மூவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்தில் 10.04.2014 அன்று இரவு இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் இருந்து தப்பிச் செல்ல முற்பட்ட போது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மூவரும் உயிரிழந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார். சுட்டுக்கொலை செய்யப்பட்டவர்களில் கோபி மற்றும் தேவிகன் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், உயிரிழந்த மற்றைய நபர் அப்பனாக இருக்கக் கூடும் என இராணுவத்தினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எனினும் இதுவரையில் உறுதி செய்யப்படவில்லை எனவும் பிரிகேடியர் தெரிவித்தார். மேற்கூறியபடி இது மஹிந்த அரசின் புலிவேட்டையின் வெறும் ஆரம்பம் மட்டுமே!. பல அரசியல் நோக்கர்கள் கூறியபடி சில வருடங்களுக்கு முன் அரங்கேற்றப்பட்ட "கிரீஸ்மனிதன்" நாடகம் போல அரசாலேயே அரங்கேற்றப்பட்ட- திட்டமிட்ட நடவடிக்கையே இப்புலிவேட்டையாகும். இப்புலிவேட்டையின் அடிப்படை நோக்கம் தமிழ் பேசும் மக்கள் மீதான அறிவிக்கப்படாத யுத்தத்தை நடத்துவதன் மூலம் நெருக்கடி நிலைக்குள் அவர்களை வைத்திருப்பதே.

யுத்தத்தால் களைத்து சலிப்படைந்து வாழும் நாம் தேசத்து மக்களை மென்மேலும் வலுவிழந்து- செயலிழந்து போகும் நிலைக்குத் தள்ளும் வேலையைச் - சிங்களத் தேசியத்தின் பாதுகாவலர்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் மஹிந்த கும்பலும் - தமிழ் தேசியத்தை காவுவதாக பவ்லா கட்டும், தமிழ் குறுந்தேசியவாதக் கும்பல்களும் திட்டமிட்டுச் செயற்படுத்துகின்றனர். இந்த இரு இனவாத சக்திகளின் இருப்பும், இனவாத அடிப்படையில் மக்களைப் பிரித்தாளும் அரசியலிலேயே தங்கியிருக்கின்றது. இவ்வுண்மையானது இலங்கை வரலாற்றில் பல தடவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனடிப்டையில் அனைத்து இனவாத வெறிகொண்ட மேலாதிக்கச் சக்திகளுக்கும் எதிரான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமானால், இனங்களுக்கு இடையிலான விரிசலை ஏற்படுத்தியுள்ள இனவாதம் சார்ந்த பிளவுகளை இல்லாதாக்கும் நடைமுறை அரசியல் சார்ந்த வேலைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இன்று சிறிய அளவில் முன்னெடுக்கப்படும் இனவாதத்துக்கு எதிரான வேலைகள் இலங்கை முழுவதும் தழுவியதாக முழுமூச்சுடன் முடுக்கிவிடப்படல் வேண்டும். மக்கள் விடுதலை பற்றியும், வர்க்க விடுதலை பற்றியும், தேசிய விடுதலை பற்றியும் கோட்பாட்டு விவாதம் நடத்துவதென்பது "வயிறு கூழுக்கு அழுகுதாம், கொண்டை பூவுக்கு அழுததாம்" என்பது போலாகும். இன்று மக்களின் தேவை- அனைத்துத் தேசியங்களின் தேவை- தேசத்தின் தேவை ஒடுக்குமுறைகளுக்கு எதிரான நடைமுறைப் போராட்டங்களே!

## மேதின நினைவுகள்... திருமதி சாந்தா சிவநாதனுடன் சில நிமிடங்கள்...

அதே போல் இந்திய அரசும் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தனி அரசை உருவாக விடாது என்று சொன்ன பொது ஒருவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தலைவர் பிரபாகரன் அவர்கள் எனது கணவனின் பள்ளித் தோழன், மாத்தையா எனது பள்ளித் தோழன். ஒரு நாள் மாத்தையா அவர்களும் அவரது தோழர்கள் சிலரும் எங்கள் வீட்டில் நடைபெற்ற சந்திப்பின் போது சமுதாயத்தில் அந்த நேரங்களில் இடம்பெற்ற சமூகத்துரோகிகள் ஒழிப்பு என்ற பெயரில் இடம்பெற்ற அநியாய கொலைகள் பற்றியும் அவையெல்லாம் போராட்டத்திற்கு, மக்கள் மத்தியில் ஆதரவை ஏற்படுத்தாது என்று எனது கணவர் கூறிய போது தனித்தமிழன் இருக்கும் வரை போராடியே தீருவோம் என்று ஆவேசப்பட்டார் மாத்தையா.

அதே காலகட்டத்தில் இவரது தம்பியார் உட்பட வேறு சிலர் ஏற்கனவே தோன்றிய தமிழ் அமைப்புக்கள் பிழையென்று புதிய இயக்கத்தை ஆரம்பித்த போது அதுவும் பிழையான பாதைக்கே கொண்டு செல்லும் என்று அவரது தம்பியாருடன் வாதிட்டது எனக்குத் தெரியும்.

**நடந்து முடிந்த முள்ளிவாய்க்கால் பிரச்சினைகளுக்குப் பிறகு இன்று என்ன நினைக்கின்றீர்கள்.....?**

ஊரில் இருந்த நேரத்தில் எனது கணவனும் இவரது சில தோழர்களும் இயக்கப் போராளிகளுக்கு தங்களால் முடிந்த சகல உதவிகளையும் அந்த நேரத்தில் வழங்கிக் கொண்டு தான் இருந்தார்கள். இறுதிக் காலங்களில இருக்க முடியாத சூழல் உருவான போது அவரை இயக்கத்தினா் தான் இந்தியா கொண்டு வந்து விட்டார்கள். இந்தியாவிலும், பிறகு வெளிநாடு என்று வந்த பின்னரும் இயக்கத்தை ஆதரிக்க வேண்டிய நிலை எங்களுக்குள் இருந்தது.

சில காலங்களின் பின்னர் வெளிநாடு வந்த எனது கணவரும் இறந்து விட்டார். இப்ப இயக்கப் பிரச்சினைகளும் முடிந்து விட்டது. மீண்டும் முன்பு தமிழ் தலைவர்களும் இயக்கங்களும் மக்களை ஏமாற்றியது போல் அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் எடுத்துத் தருவோம். புலம்பெர் தமிழர் இருக்கும் வரை எமது தமிழினத்துக்கு அழிவேயில்லை என்று பசப்பு வார்த்தைகளை கூறி தமிழ் மக்களைப் பேக்காட்டி மேலும் மேலும் ஏமாற்றாமலும் சீமானும் வைக்கோவும் நெடுமாறனும் வந்து தமிழீழம் எடுத்துத் தருவார்கள் என்று நம்பி இன்னொரு அழிவுப்பாதைக்கு மக்களை இட்டுச் சொல்லாமலும் ஏற்கனவே சண்முகதாசன் போன்ற தலைவர்கள் முன்வைத்த கருத்துக்களை மனதிற் கொண்டு இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சேர்ந்து வாழ ஒரு அரசை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது தான் சாலச்சிறந்தது.

வேறு பல விடையங்களும் கதைத்து முடிந்தவுடன் இன்று இந்தப் புலம்பெயர் மண்ணில் சிங்கள தமிழ் உறவுகளும் ஒற்றுமைகளும் கொஞ்சம் கொஞ்சமாய் வளர்ந்து வருவதை எண்ணி மனம் மகிழ்வதாக திருமதி சாந்தா சிவநாதன் குறிப்பிட நன்றியுடன் விடைபெற்று வந்தேன்.

முற்றும்.

# இந்தியத் தேர்தல் 2014 மோடி தலைமையில் ஈழம் மலருமாம்!

12 வைகாசி 2014 அன்று நிறைவுக்கு வரவிருக்கும் இந்தியப் பாராளுமன்ற -16 வது லோக்சபாத் தேர்தல், வழமையை விட இந்த முறை சர்வதேசக் கவனத்தைப் பெற்றுள்ளது. காரணம் இந்துத்துவ-மதவாதக் கொலையாளி நரேந்திர மோடியும்,காங்கிரஸ் சார்பில் ராகுல் காந்தியும் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற போட்டியிடுவேதே இதற்கான காரணமாகும். இதேவேளை, இத்தேர்தலில் தமிழ்நாட்டிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது. வழமைபோல தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகளான தி.மு.க வும் - அ.இ.அ.தி.மு.க வும் தேசியக்கட்சிகளான காங்கிரசுடனோ அல்லது பாரதிய ஜனதாவுடனோ கூட்டணி வைக்காமல் தேர்தலில் போட்டியிடுகின்றன.

இந்தியத் தேர்தல் கமிசனின் தகவலின்படி 81.45 கோடி இந்தியர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி





பெற்றவர்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 543 தொகுதிகளில் லோக்சபாவுக்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய நடாத்தப்படும் இத் தேர்தல், உலக அளவில் பிரமாண்டமான - பெரிய தேர்தலாகும். இத்தேர்தலின் முடிவுகள் வைகாசி 16 அன்று அறிவிக்கப்பட்டு, ஆனி மாதத்தின் முதல் வாரத்தில், வெல்லும் கட்சி அல்லது கட்சிகள் ஆட்சி அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2009 ஆண்டில் நடந்த தேர்தலில் பாரதிய ஜனதாக் கூட்டணி வெல்லும் எனப் பரவலாகக் கணிக்கப்பட்டது. அதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று காங்கிரஸ் கூட்டணி இரு தடவைகள் ஆட்சியில் இருந்தும், அதன் மீது சுமத்தப்பட்ட இலஞ்ச ஊழல் மற்றும் அதன் கூட்டணிக்குள் நடந்த இழுபறிகளுமாகும். ஆனால் அத்தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 206 பிரதிநிதிகளை வென்று ஆட்சி அமைத்தது. பாரதிய ஜனதாவின் கூட்டணி 106 இடங்களைப் பெற்று இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இவ்வருடத் தேர்தலிலும், மோடி அலை வீசுவதாகவும், பாரதியஜனதாவின் கூட்டணி நரேந்திர மோடி தலைமையில் பாரிய வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கூறியபடி நரேந்திர மோடி பொதுவாக ஹிந்துத்துவ மதவாத வெறியனாகவும்,2002-இல் குஜராத்தில் நடந்த முஸ்லீம்கள் மீதான படுகொலைகளுக்குத்தலைமை தாங்கிய ஒருவராகவோ அல்லது ஆதரவு வழங்கியவராகவோ அறியப்பட்டவர். அதேவேளை பின்தங்கிய நிலையில் இருந்த குஜராத் மாநிலத்தைப் பொருளாதார ரீதியில் உயர்த்திச் சீரான ஆட்சியை நடத்தும் திறமை வாய்ந்தவராக மோடி அவரது ஆதரவாளர்களால் பிரச்சாரம் செய்யப்படுகிறார். நரேந்திர மோடி ஆட்சித்திறமை உள்ளவர் என்ற விம்பத்தை முன்னிறுத்தியே இந்தத் தேர்தலில் அவருக்கு ஆதரவு திரட்டப்படுகிறது. அத்துடன் பாரதிய ஜனதாக் கட்சியின் ஹிந்துத்துவ - மதவாத வெறியும் அவரின் வெற்றிக்கு வழிவகுக்கும் என நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கையின் காரணமாகவே, 2002 இல் நடந்த முஸ்லீம்கள் மீதான படுகொலையின் பின் மோடியின் குஜராத் அரசுடன் தொடர்புகளைத் துண்டிப்பதாக அறிவித்த ஐரோப்பிய யூனியனும்,அமெரிக்காவும் மோடி இந்தியப் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் தாம் அவருடன் நெருங்கிய ராஜரீகத் தொடர்புகளை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளன.

மோடியின் எதிராளியாகத் தேர்தலில் போட்டியிடும்- காங்கிரசின் பிரதமமந்திரி வேட்பாளரான ராகுல் காந்தியை எடுத்துக் கொண்டால் காங்கிரசின் பாரம்பரியம் சார்ந்த செல்வாக்கைத் தவிர- மோடி போன்று வேறு எந்தப் பகிரங்கமான அரசியல் வரலாறும்- செல்வாக்கும் அவருக்கு இல்லை. இந்தியாவின் பெரும்பான்மைப் பெண்களால் மிகவும் விரும்பப்படும் மாப்பிள்ளையாக ஊடகங்களால் வர்ணிக்கப்பட்ட ராகுல் காந்தி, தற்போது மாப்பிள்ளைத் "தகுதியிலிருந்தும்" இறக்கப்பட்டுள்ளார். தனிப்பட்ட வாழ்க்கையில் Veronique Cartelli என்ற ஸ்பெயின் பெண்ணுடன் காதலனாக இருப்பதாக 2004 இல் அறிவித்த ராகுல் காந்தி, இப்போது10 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அப்பெண்ணுடன் தனக்கான உறவு என்னவென்பதைப் பற்றி கதைப்பதற்கு மறுத்து வருகிறார். அபிவிருத்தி சார் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்ற ராகுல் காந்தி, 2014 வரை இரண்டு தடவைகள்(2004-2009, 2009-2014) பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்தியப் பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்க விதத்தில் பாராளுமன்ற விவாதத்தில் அவர் பங்கு கொண்டதாகவோ அல்லது இந்திய அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பிரேரணையை அங்கு கொண்டு வந்ததாகவோ எந்தவிதப் பதிவும் இல்லை. தனது முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதித்துவக் காலத்தில் மொத்தம் 5 தடவைகள் பாராளுமன்ற விவாதத்தில் அவர் பங்கு கொண்டதுடன் 3 கேள்விகளைக் கேட்டுள்ளார். 2009-2014 வரையான காலத்தில் ஒரே ஒரு விவாத்தில் மட்டும் பங்கு கொண்ட ராகுல் காந்தி,எந்தவித கேள்வியையும் கேட்கவில்லை. அத்துடன் கிட்டத்தட்ட பாராளுமன்றதிற்குச் சமூகமளிக்கவில்லை என்றே கூறலாம், என PRS- Indiya என்ற அரசியல் ஆய்வு மையம் கூறுகிறது.

மொத்தத்தில் பாராளுமன்றமும் அங்கு நடக்கும் நிகழ்வுகளும் உண்மையில் வெறும் சம்பிரதாயங்களே. ஆட்சி அதிகாரமென்பது பாராளுமன்ற கட்டடத்திற்க்கு வெளியே தீர்மானிக்கப்படுகிறது. உலகத்தின் பெரிய ஜனநாயகநாடு எனக்கூறப்படும் இந்தியாவில் ஒரு கொலைகாரனும், பாராளுமன்றத்தை மதிக்காத ஒருவனும் கூடப் பிரதமராக போட்டியிடலாம். ஆட்சி செய்யலாம். இது தான் நாம் மோடி மற்றும் ராகுல் காந்தியின் அரசியல் செயற்பாடுகளிலிருந்து தெரிந்து கொள்ளக் கூடியது.

தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கு இந்தத் தேர்தலிலும் இலங்கைப் பிரச்சனை சீமான், வைகோ போன்ற பிழைப்புவாத அரசியல்வாதிகளால் வாக்கு வாங்க உபயோகிக்கப்படுகிறது. பாரதிய ஜனதாவுடன் கூட்டு வைத்துள்ள வைகோ, பாரதிய ஜனதாவும் அதன் பிரதமர் வேட்பாளரான மோடியும் தமிழ் ஈழத்தைப் பெற்றுத் தருவார்களெனப் பிரச்சாரம் செய்கிறார். ஆனால்,அவரின் பிரச்சாரம் தொடங்கிச் சில நாட்களிலேயே,இலங்கை பற்றிய தற்போதுள்ள காங்கிரஸ் அரசின் கொள்கையைத் தாம் மாற்றப்போவதில்லை என்றும், தமிழ் ஈழத்துக்கு எப்போதுமே தாம் ஆதரவு தரமாட்டோமென்றும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைமை அறிவித்தது. ஆனாலும், விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல, தொடர்ந்தும் ஈழ விடுதலை பற்றி முழங்கி வருகிறார் வைகோ என்ற பிழைப்புவாதி.

மறுபுறத்தில் சீமான் என்ற சினிமாக் கூத்தாடி எந்தக் கட்சியுடனும் கூட்டு வைக்காவிடினும், காங்கிரசைத் தோற்கடிக்கப் பிரசாரம் செய்வதாகக் கூறி வருகிறார். ஆனாலும் அவர் ஜெயலலிதாவுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வது வெளிப்படையான விடயமாகும். இதனாலேயே அதிருப்தி காரணமாக அவரின் கட்சியின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சித்திரை மாதக்கடைசியில் கட்சியை விட்டு வெளியேறினார்கள் எனக் கூறப்படுகிறது. சீமான் என்ற இனவாதி தனது பேச்சில் பெரும்பாலும் நமது நாட்டு அரசியலையே பேசி வருகிறார். தனது பிரச்சார உரையொன்றில்

"அழிவின் விளிம்பில் இருக்கிற தமிழ் சமுதாயத்துக்கு ஒரே தீர்வு தனி ஈழ சோசலிச குடியரசு. இலங்கை ஒரு நாடு அல்ல. அங்கு தமிழர்களும், சிங்களர்களும் வாழ்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை. இலங்கையும்,ஈழமும் பிரிய ஒரே வழி பொது வாக்கெடுப்பு தான் என்று தீர்மானம் நிறைவேற்றிய இந்தியாவின் ஒரே தலைவர் ஜெயலலிதா தான்"என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவித குற்ற உணர்வோ-வெட்கமோ இல்லாமல் ஏதோ தமிழ் ஈழம் கிடைத்து விட்டது போல துள்ளிக் குதித்தபடி, இலங்கைத் தமிழ் "தேசிய" ஊடகங்களும், புலம்பெயர் ஊடகங்களும் மேற்படி சீமானின் முழு உரையையும் வெளியிட்டுப் பிரச்சாரப்படுத்தினார்கள்.

2009- தேர்தலில் இலை மலர்ந்தால் ஈழம் மலரும் என பிரச்சாரம் செய்த சீமானையும், பாரதிய ஜனதா வெல்லும் என்றும்- அதுவரை யுத்தம் செய்யும்படியும் கேட்டுக்கொண்ட வைகோவையும் நெடுமாறனையும் நம்பியே புலிகள் சில யுத்த தந்திரோபாய நகர்வுகளை மேற்கொண்டார்கள். இலங்கை அரசும் அதன் கூட்டாளிகளும் புலிகளின் தோல்விக்குக் காரணமென்றால் அதேபோன்று மறைமுகமாகப் புலிகளின் தோல்விக்கும் அழிவுகளுக்கும் மேற்படி தமிழ்நாட்டு அரசியல்வாதிகளும் பொறுப்பானவர்கள். இன்றுள்ள நிலையில் தமிழ் பேசும் மக்களும், இலங்கையின் ஒடுக்கப்பட்ட மக்களும் ஆதிக்க இந்திய வர்க்கத்தை நம்பி அரசியல் செய்ய முனைவது மற்றுமொரு முள்ளிவாய்க்காலுக்கே வழி சமைக்கும். இன்றுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் தேவை இந்தியாவில் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களின் உறவு மட்டுமே! அதை விடுத்து இந்தியத் தேர்தலில் யார் வென்றாலும் இலங்கையின் ஒடுக்கப்பட்ட இனங்களினதும், மக்களினதும் நிலை மோசமடையுமே தவிர, வேறு எந்த மக்கள் நலம் சார்ந்த மாற்றமும் வரப்போவதில்லை.



## இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும்?

மக்களுடன் சேர்ந்து இதை எதிர்கொள்ள வேண்டும்.

உழைத்து வாழும் எந்த இன மக்களும் வஞ்சகமற்றவர்கள். தங்கள் உழைப்புச் சார்ந்து நேர்மையாக வாழ்பவர்கள். மற்றவர்களை ஏமாற்றி வாழ்பவர்களல்ல. மற்றவர்கள் துன்புறுத்தப்படும் போது, அதற்கு உடன்பட மறுப்பவர்கள். இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் என, அனைத்து உழைக்கும் மக்களின் உயரிய பண்பு இது. இது யாருக்கும், எந்த இனத்துக்கும் விதிவிலக்கல்ல.

இந்த மக்கள் தங்கள் உழைப்பு சார்ந்த உயரிய பண்பின் அடிப்படையில், தமக்குள் ஒன்றிணைய முடியாத வண்ணம், உழைப்பைச் சாராது வாழும் இழிபண்பாட்டை அடிப்படையாக கொண்டவர்களால் பிரித்து வைக்கப்படுகின்றனர். இதுதான் உண்மை. தாங்கள் உழைத்து வாழாத தங்கள் வாழ்க்கைக்கு அமைவான, குறுகிய தேர்தல் அரசியல் மூலம் மக்களை பிரித்து வழிநடத்துகின்றனர். மக்களின் உண்மையான வாழ்க்கையில் இருந்து பிரிப்பதே, பிழைப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வாக்கு அரசியல். வளர்ப்பு மந்தையை அடைத்து வைத்திருப்பது போல், மக்களை வாக்கு அரிசியலுக்குள் அடைத்து வைத்து வாக்குப் போட வைக்கின்றனர்.

அடைத்து வைத்த மந்தைக்கு திணி போட்டு கறப்பது போல், இனவாதத் தேர்தலை நடத்தி மக்களை அதற்குள் வாக்களிக்க வைக்கின்றனர். அனைத்து இன மக்களையும் இந்த இனவாத சக்திக்குள் தள்ளிவிடுகின்றனர். இனவாத தேர்தல், இனவாத வாக்களிப்பு மக்களின் சொந்தத் தெரிவல்ல. மதம் சார்ந்த சடங்குகள் போல், தேர்தலும் ஒரு சடங்கு. சடங்கை செய்யுமாறும், அதில் பங்கு கொள்ளுமாறும், உழைத்து வாழும் எல்லாவின மக்களிடம் உழைத்து வாழாத இனவாதிகள் திணிக்கின்றனர்.

இதில் இருந்து விடுபட இலங்கை மக்கள் இனவாதத்துக்கு எதிராக அணிதிரள்வதன் மூலம், இனவொடுக்குமுறையை மட்டுமல்ல, தங்கள் மீதான பொருளாதார ஒடுக்குமுறையை எதிர் கொள்ள முடியும். உழைக்கும் மக்களின் பொருளாதாரத்தை பிரித்து சுரண்டும் வர்க்கத்தின் இனவாத அரசியலுக்கு பதில், உழைக்கும் மக்களின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இனவாதமல்லாத அரசியலின் தேவையினை கடந்தகால படிப்பினைகளும் அனுபவங்களும் எந்த நிபந்தனைகளும் இன்றி எம்மிடம் கோரி நிற்கின்றன.

## பாதை தெரியாமல்

### கொடிகளுக்குள் மாட்டிக் கொள்ளல்

பேச வேண்டும். இலங்கையில் சூழல் அழிக்கப்படுவது முஸ்லிம்களின் சூழ்ச்சியினாலல்ல, நவ தாராளமய முதலாளித்துவத்தின் பிரதிபலன்தான். காணிப் பிரச்சினையும் இந்த சமூக பொருளாதார முறையின் விளைவுதான். சிங்கள - தமிழ் - முஸ்லிம் - பறங்கியர் - மலே - ஆதிவாசிகள் ஆகிய அனைவருக்கும் இந்நாட்டில் வாழ உரிமையிருக்கிறது. வாழ்வதற்காக குடியிருப்புக்களை பெற்றுக் கொள்ளும் உரிமையும் இருக்கிறது. இந்த சமூக பொருளாதார முறையினால் அந்த உரிமையை பெற்றுக் கொடுக்க முடியாது. ஆதலால் காணிப் பிரச்சினையும் தீராது. சூழலையும், வனக் காப்புப் பிரதேசத்தையும் பாதுகாப்பதும், மக்களின் காணி உரிமைகளை பாதுகாப்பதும் ஆகிய இரண்டும் புரட்சிகர செயற்பாட்டின் வாயிலாக மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும். அதற்காக தொழிலாளர் வர்க்கம் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்களின் செயற்பாடுகள் அத்தியாவசியமாகும். அதுவரை இந்தப் பிரச்சினை அப்படியே இருக்கப்போவதோடு, அந்த பிரச்சினைகளை வைத்து பிற்போக்குவாதிகள் நண்மையடைவார்கள். ஒடுக்கப்பட்டவர்களுக்கு மத்தியில் வைரி மனப்பான்மையை வளர்க்கவும், பிரிவினையை போஷிக்கவும் அந்தப் பிரச்சினை தொடர்ந்து பயன்படுத்தப்படும். அதனை தடுக்கும் வழிமுறை குறித்து பேசுவதற்கு மே தினம்தான் சரியான நாள். மே

தினத்தை உரித்தாக்கிக் கொள்ளல்

ஆட்சியாளர்கள் பயிரிடும் பாதை மாறும் கொடிகளிலிருந்து மீள்வதற்கு, தொழிலாளர் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட சக்திகளின் பலத்தை வளர்க்க வேண்டும். அந்த அர்த்தத்தில்தான் மே தினம் முக்கியமாகப்படுகிறது. மே தினம் என்பது உழைக்கும் மக்களின் தினமாகும். ஐக்கிய அமெரிக்காவின் சிகாகோ நகர தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் கொடூரமாக அடக்குமுறை செய்யப்பட்ட நாளிலிருந்து மே தினம் ஆரம்பமாகிறது. தொழிலாளர்கள் ஏந்திய வெள்ளைக் கொடிகள் தொழிலாளர்களின் இரத்ததால் செந்நிறமாக மாறியது. அதன் பின்னர் அந்த நாள் உலக தொழிலாளர் தினமாக பெயரிடப்பட்டதோடு, ஆரம்ப காலத்தில் அந்த தினத்தை நினைவு கூர்வதற்காக தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களுக்காக உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிகள் ஒன்றுகூடின. ஆனால் பிற்காலத்தில் வலதுசாரி கட்சிகளும், முதலாளிகளும் மே தினத்தை நினைவு கூரத் தொடங்கினர். இதன் விளைவாக மே தினம் தொழிலாளர்களின் அமைப்பு ரீதியிலான பலத்தை காட்டுவதற்குப் பதிலாக களியாட்ட விழாவாக மாற்றமடைந்தது. அது தொழிலாளர்கள் முதற்கொண்டு உழைக்கும் மக்களின் பங்கேற்பில்லாத, அரசியல் கட்சிகள் தமது பலத்தை காட்சிப்படுத்தும் நாளாக மாறியது. இதனால் தொழிலாளர்கள் மே தின நினைவு கூரலிலிருந்து ஒதுங்கினர். பெரும்பான்மை தொழிலாளர்களை பொறுத்தவரையில் மே தினம் என்பது விடுமுறை தின் மட்டுமே. வீட்டு வேலைகளை கவனிப்பதற்கு, பிள்ளைகளோடு காலத்தை கடத்துவதற்கு, உல்லாசப் பயணம் செல்லும் தினமாக மாறியுள்ளது.

இந்த ஆக்கத்தில் நாம் ஆரம்பத்தில் கூறி அவலங்கள் மீளமைக்கப்படுவதை தடுப்பதற்கும் ஆளும் வர்க்கத்தின் வழிதவறி கொடிகளில் ஒடுக்கப்பட்டவன் சிக்குவதைத் தடுப்பதற்கும் மே தினத்தின் உண்மையான அர்த்தத்தின்பால் நெருங்க வேண்டும். விழா நாளுக்கும், விடுமுறை நாளுக்கும் அப்பால் சென்று ஒடுக்கப்பட்ட மக்களின், உழைப்பை சிந்தும் மக்களினது செயற்பாட்டின் ஆரம்ப அடியாக மே தினத்தை ஆக்க வேண்டும். இந்த சமூக முறை தனது பிரச்சினைகளையே தீர்க்க முடியாது நாறிக்கொண்டிருக்கும் நிலையில் ஒட்டுமொத்த சமூகத்தையும் படுகுழியில் தள்ளுவதற்கு இந்தப் பிரச்சினையை பயன்படுத்துகிறது. கொடுமைகள் மீண்டும் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றன. அதனை தடுக்கும் முகூர்த்தமாக மே தினத்தை ஆக்கிக் கொள்ள வேண்டும். உலக அரசியலையும், இலங்கை அரசியலையும் பற்ற ஆழமாக சிந்திப்பதற்கும், ஏகாதிபத்தியத்தினதும், ஆட்சியாளர்களினதும் இனவாதம் தரும் துருப்புச் சீட்டிலிருந்து மீளும் முறை குறித்து சிந்திப்பதற்கும் இந்த மே தினத்தை முகூர்த்தமாக கொள்ளுமாறு தொழிலாளர்கள் முதற்கொண்டு ஒடுக்கப்பட்ட சக்திகளுக்கு ஆலோசனை வழங்குகிறோம். அதற்காக மே தினத்தை கண்காட்சியாளர்களினதும், பிற்போக்குவாதிகளினதும் கைகளிருந்து பறித்து உழைக்கும் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். மே தினத்தை பொது விடுமுறை தினமாக வரையறுக்காது தொடர் செயற்பாட்டின் சந்திஸ்தானமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். எமது மே தின செய்தி இதுவே.

## மூலதன நுகர்வாக்கம், பெண்ணை காட்சிப்பொருளாக்கியுள்ளது

என்பது, தனிப்பட்ட ஆண் பெண்ணின் உடல் மீது கொண்டு இருந்த தனிவுரிமையை இல்லாதாக்குகின்றது. இது ஆணாதிக்கத்தில் இருந்து பெண்ணை விடுவிக்கவில்லை. மாறாக பெண் உடலை அனைவருக்குமான ஒன்றாக மாற்றுகின்றது. இயற்கையான இனப்பெருக்கம் சார்ந்த பாலியல் உள்ளடக்கத்துக்குப் பதில், பெண்ணின் உடலை நுகர்வுக்குரிய ஒன்றாக்கி விடுகின்றது. பெண் உடல் மீது தனிப்பட்ட ஆணின் உரிமை சார்ந்து காணப்பட்ட குடும்பத்தில், ஆண் கொண்டிருந்த சமூகப் பொறுப்பை அகற்றிவிடுகின்றது. தனி ஆணின் சொத்துக்குப் பதில் தன் உடல் மீதான பெண்ணின் உரிமை ஊடான பாலியல் நடத்தை, சமூக செயற்பாட்டில் இருந்து ஆணை விடுவித்துவிடுகின்றது. இங்கு ஆணுக்கு நுகர்வாக மட்டும், பாலியல் நடத்தை மாறுகின்றது. இயற்கை சார்ந்து பெண் சமூக உயிரியாக தொடர்ந்து நீடிக்கின்றாள்.

அதாவது பெண்ணின் உடல் மீதான தனி ஆணின் உரிமைக்கு பதில், பெண் தன் உடல் மீதான உரிமை என்பது, நுகர்வு சந்தைக்குட்பட்ட தனிவுடமை சமூக அமைப்பிலான பாலியல் தேவைக்குள் பூர்த்தி செய்யக் கோருகின்றது. முன்பு தனி ஆண் சார்ந்த பாலியல் மூலமான சமூக உள்ளடக்கத்தை விட, தனி ஆண் சாராத நுகர்வாக்க ஆணாதிக்க உலகில் பெண் தன் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டி இருக்கின்றது. தனிப்பட்ட பெண்ணின் சொந்த தெரிவல்ல, மாறாக தனிவுடமை அமைப்பிலான நுகர்வாக்கத்தின் விளைவு இது.

நுகர்வாக்க சமூக அமைப்பில், பெண்ணை சதைப் பொருளாக மாற்றுகின்றது. இயற்கையிலான பாலியல் நடத்தையில், ஆணின் முந்தைய சமூகப் பொறுப்பில் இருந்து விடுவித்து இருக்கின்றது. அதாவது ஆணின் பாலியல் நடத்தையை வெறும் நுகர்வாக மாற்றியமைக்கின்றது. பெண்ணை நுகர்வாக்கப் பொருளாக்கி விடுகின்றது. நுகர்வாக்கச் சந்தையின் ஆன்மாவோ, பெண்ணின் சதையை சார்ந்தே தன்னை வெளிப்படுத்துகின்றது.

இன்றைய சமூக அமைப்பில் நுகர்வாக்கமே மனித செயற்பாடாகிவிட்ட நிலையில், பெண்ணும் நுகரப்பட வேண்டியவள் தான். தனிவுடமை சார்ந்த நுகர்வாக்க அமைப்பில், இதுவே ஆணாதிக்க விதியும் கூட. பெண் ஆண்களால் நுகரப்பட வேண்டியவளாக, பெண் அதை விரும்பி அனுபவிப்பவளாக மாற்றுகின்றது. நுகர்வாக்கமே இதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

மூலதனத்தின் நுகர்வாக்கச் சந்தை உள்ளடக்கம் என்பது, நுகர்வை அனுபவி என்ற அடிப்படையில் கட்டமைக்கப்பட்டு இயங்குகின்றது. இதற்கு அமைவாக பெண் நுகரப்பட வேண்டியவளாகவும், ஆண் நுகர்பவனாகவும் இருக்கின்றான். பெண் அதை தன் சொந்த நுகர்வாக்க அனுபவிப்பாக உணரும் வண்ணம், பெண்ணை "சுதந்திரமாக" முன்னிறுத்துகின்றது. இந்த நிலையை பெண்ணின் "சுதந்திரமான" நுகர்வாக்கமாக சந்தை ஊக்குவிக்கின்றது.

கடந்த காலத்தில் ஆணின் தனிச்சொத்தாக பெண் நீடித்த ஆணாதிக்க சமூக அமைப்பில், பெண் திருப்தியடைந்து வாழ்ந்ததாக ஆணாதிக்க சமூகப் படிமானம் எப்படி புரிந்து கொள்ளப்பட்டதோ, அதேயொத்த அடிப்படையில் பெண் தன் உடல் மீதான "சுதந்திரம்" சார்ந்த சதை நுகர்வாக்கத்துக்குள் வாழ வைக்கப்படுகின்றாள். அதாவது பெண் இதில் திருப்தியடைவதான ஆணாதிக்க படிமானத்தை, நுகர்வாக்க எல்லைக்குள் கட்டமைக்கப் படுகின்றது. பெண் இதையே தனது பெண் விடுதலையாக எண்ணுமளவுக்கு, நுகர்வாக்க அமைப்பு பெண்ணை வடிவமைக்கின்றது. தன்னை நுகர்வுக்குரிய பாலியல் பண்டமாக முன்னிறுத்தும் வண்ணம், சமூகக் கட்டமைப்பின் சமூகத் தன்மையை அகற்றி தனிமனித நுகர்வு வக்கிரத்தை புகுத்தி விடுகின்றது. பெண்ணை தனது நுகர்வாக்க சந்தைக்கு ஏற்ப எப்படி காட்சிப்படுத்துகின்றது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

## முதலாளித்துவ 'ஜனநாயகமும்', தேர்தல் முறையும் காலாவதியாகிவிட்டது

இக் கட்சிகளே, ஆட்சியில் ஆளும் தரப்பாக இருக்க முடியும்.

தேர்தல் "ஜனநாயக" முறை மூலம், உலக மூலதனத்திற்கு மாற்றான தேசிய கொள்கையுடன் எந்தக் கட்சியும் ஆட்சி ஏற முடியாது. ஆட்சிக்கு வந்தால் நீண்டகாலம் ஆட்சியில் நீடிக்க முடியாது.

தனிவுடமையிலான மூலதனத்தின் உலகமயமாதலுக்கு மாறான, வேறுபட்ட மக்கள் சார்ந்த பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்க வேண்டும் என்றால், மக்கள் கீழ் இருந்து அணிதிரட்டப்பட்டு உருவாக்கப்பட மக்கள் ஆட்சியால் மட்டும்தான் சாத்தியமானது. உலகமயமாதலை அடிப்படையாகக் கொண்ட மூலதனத்தின் அடிப்படைகளை, தேர்தல் மூலம் மாற்ற முடியாது. தேர்தல் ஆட்சியாளரை மாற்றுமே ஒழிய, ஆளும் வர்க்கத்தையும், அதிகார வர்க்கத்தையும் மாற்றாது. ஆட்சியாளர்கள் இதற்கு சேவை செய்பவராக இருக்க மட்டும் தான் முடியும். மூலதனத்தின் இன்றைய சர்வதேச தன்மை என்பது, மக்களுக்கான பொருளாதாரக் கொள்கையையோ, சமூக நலத்திட்டங்களையோ தேர்தல் மூலம் கொண்டு வர முடியாத வண்ணம், அடிப்படையிலேயே மக்கள் விரோத தன்மை கொண்டது. அதாவது தனிவுடமை சார்ந்தது, சமூகவுடமைக்கு எதிரான அடிப்படையிலானதே இந்த தேர்தலை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ "ஜனநாயக" சமூக அமைப்பு முறை.

தேர்தல் மூலமான ஆட்சி மாற்றங்கள் மூலம் மக்கள் எதிர்பார்ப்பது, தங்களது சமூக பொருளாதார மாற்றங்களைத் தான். தங்களை ஆளுகின்றவர்களின் மக்கள் விரோத கொள்கைகளால் வாழ முடியாத நிலையில் தான், ஆட்சியை மாற்றுகின்றனர். ஆட்சி மாற்றங்கள் அதை பூர்த்தி செய்வதில்லை. உலகம் தளுவிய அளவில் அரசுகள் பற்றியும், ஆட்சியாளர்கள் பற்றியுமான நம்பிக்கைகள் மக்களிடம் தகர்ந்து வருகின்றது. மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற ஆட்சியாளர்கள் பற்றிய பொது அதிருப்தி அதிகரித்து வருகின்றது. தேர்தல்கள் காலத்துக்கு காலம் வந்து போகும் சடங்காகி விட்டன. யார் ஆட்சிக்கு வந்தாலும், சமூக பொருளாதாரத்தில் மாற்றங்கள் நடப்பதில்லை. ஆட்சி மாற்றங்கள் மூலமான, சமூகம் சார்ந்த பொது எதிர்பார்ப்புகள் காலாவதியாகி விட்டன. மக்கள் தங்கள் சொந்த நடைமுறை மூலம், உணருகின்ற காலத்தில் வாழ்கின்றனர். மக்கள் தங்களுக்கான ஆட்சி மூலம் தான் மாற்றங்களை கொண்டு வர முடியும் என்ற உண்மையைக் காண்கின்றனர். இந்த நிலையில் சமூக இயக்கத்தை முன்னெடுக்க கூடிய புரட்சிகரமான பாட்டாளி வக்க கட்சியின் வெற்றிடம் தான், நிர்வாணமாகி விட்ட தேர்தல் ஜனநாயகத்தை தொடர்ந்து பாதுகாத்து நிற்கின்றது. இந்த உண்மையை சமூகம் மீது அக்கறை உள்ளவர்கள் புரிந்து கொண்டு, அணிதிரண்டு போராட வேண்டிய வரலாற்று காலத்தில் நாங்கள் வாழ்கின்றோம்.

போராட்டம்

41/32, கெந்தஹேனவத்தை, தெபானம, பன்னிபபிட்டிய.
தொலைபேசி/தெலைநகல்: 094-113185692
mpssrilanka@gmail.com, http://www.peoplesstruggle.com

# தொழிலாளர் தினத்திற்கான முன்னேற்பாடுகள்

- பதுளை



- தெமட்டகொடை புகையிரத வேலைத்தலம்



- நவகம்புர





- அவிசாவலை



- நீர்ப்பாசன வீடமைப்பு இரத்மலானை



- களுபோவிலை வைத்தியசாலை



- எம்பிலிபிட்டிய



41/32, கெந்தஹேன வத்தை, தெபானம, பண்ணிபிட்டிய் வசிக்கும் ஜுட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.